



# ஞானச்சுடர்

## மலர்

தை 1999




வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வழி

"பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று."

பொருள்:

பொருளிடத்தில் பற்றுக் கொள்ளும் ஈயாத்தன்மை யானது எந்தக் குற்றத்தோடும் ஒப்பிடமுடியாத குற்றமாகும்.

ஸ்ரீ

அருணாசலசிவ அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலசிவ!

51) தொட்டருட் கைமெய் கட்டிடா யெனிலியா
னட்டமா வேனரு ளருணாசலா (அ)

52) தோடமி னீயகத் தோடொன்றி யென்றுஞ்சந்
தோடமொன் றிடவரு ளருணாசலா (அ)

53) நகைக்கிட மிலைநின் னாடிய வெனையரு
ணகையிட்டுப் பார்நீ யருணாசலா (அ)

54) நாணிலை நாடிட நானா யொன்றிநீ
தாணுவா நின்றனை யருணாசலா (அ)

55) நின்னெரி யெரித்தெனை நீறாக் கிடுமுன்
னின்னருண் மழைபொழி யருணாசலா (அ)

[தொடரும் ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 13

1999 தை


## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1) | சூரபன்மனை மயக்கிய இரு குணங்கள் | 1 - 4 |
| 2) | வாழ்க்கை நிலையாமை | 5 - 6 |
| 3) | பஞ்சமுக ஆஞ்சநேயர் தோன்றிய வரலாறு | 7 - 10 |
| 4) | அகமுகமாகுக | 11 - 12 |
| 5) | நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாறு | 13 - 15 |
| 6) | சாயி போதனை | 16 - 17 |
| 7) | எங்கே நிம்மதி | 18 - 20 |
| 8) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 21 - 23 |
| 9) | திருவாசக விழா | 24 - 27 |
| 10) | திருமந்திரம் காட்டும் தத்துவக் கருத்துகள் | 28 - 33 |
| 11) | வாழ்த்துகின்றோம் | - 34 |
| 12) | சந்நிதியான் | 35 - 38 |
| 13) | நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே (ஒரு கருத்துப் பகிர்வு) | 39 - 40 |
| 14) | அன்பர் ஒருவரின் இதயத்திலிருந்து | - 41 |
| 15) | வாசகர் போட்டி பற்றிய முடிவுகள் | 42 - 43 |
| | மாணவர் பக்கம் | |
| 16) | இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு | 44 - 45 |
| 17) | Easy Way to Learn English (Part-13) | 46 - 48 |



அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது ஆண்டில்.......

ஞானச்சுடர் தனது முதலாவது வயதைப் பூர்த்தி செய்து இன்று இரண்டாவது ஆண்டில் காலடிவைக்கின்றது. எமது பேரவை செயற்படுத்தி வருகின்ற பல பயனுள்ள ஆத்மீகச் செயற்பாடுகளில் ஞானச்சுடர் வெளியீடும் ஒன்றென்பது நீங்கள் அறிந்ததே.

பேரவைச் செயற்பாடுகளில் நேரடியாக வந்து கலந்துகொள்ள முடியாத அன்பர்களுக்கும் ஆத்மீகக் கருத்துக்கள் சென்றடைய வேண்டும் என்பது எமது மிக முக்கிய குறிக்கோளாகும் என்பதை சென்றவருட முதற்சுடரில் நாம் குறிப்பிட்டிருந்தோம். அந்தக் குறிக்கோள் நாம் எதிர்பார்த்ததைவிட மிகச்சிறப்பாக அன்பர்கள் மத்தியில் சென்றடைந்து கொண்டிருப்பது எமக்கு மனநிறைவைத் தருகின்றது.

வாசகர் போட்டியில் கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு போன்ற பகுதிகளிலிருந்தும் கணிசமான வாசகர்கள் பங்குபற்றியுள்ளார்கள். இது வாசகர்போட்டியில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கையை மட்டுமன்றி, வாசகர்வட்டத்தின் எல்லையும் எந்தளவுக்கு விரிவடைந்து செல்கின்றது. என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

சுடரில் பிரகாசம் அதிகரித்துக் கொண்டுவருவதை வாழ்த்தி பல அன்பர்கள் நேரடியாகவும் மற்றும் பலர் தபால் மூலமும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்த வண்ணம் உள்ளனர். அவர்கள் எல்லோருக்கும் எமது சுடர்பிரகாசிப்பதற்கு தரமான ஆக்கங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற அறிஞர் பெருமக்கள் சார்பிலும் சமயப்பெரியார்கள் சார்பிலும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். மேலும் எமது பணிகளை ஆர்வத்துடன் தொடர்வதற்கு உற்சாகம்தந்து கொண்டிருக்கின்ற அன்பான வாசகர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இறுதியாக எமது எண்ணத்திலும் செயலிலும் தோன்றாத்துணையாக இருந்து எம்மை எல்லாம் வழிநடாத்துகின்ற கலியுகக்கந்தனாம் சந்நிதி முருகனின் திருவருள் தொடர்ந்தும் எமக்குக் கிடைக்க வேண்டுமென்று அவனது திருப்பாதங்களை இருகரம் கூப்பி வணங்குகின்றோம்.

“நல்லதையே நினைத்து நல்லதையே செய்து நாம் எல்லோரும் சந்நிதி முருகன் திருவருளைப் பெறுவோமாக”

மலர்க்குழு சார்பாக
ந. அரியரத்தினம்
(ச. ஆ. சை. க. ப. பேரவை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வாரந்தோறும் சைவத் தமிழ்க் கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றது. அறிஞர்களை, பெரியோர்களைப் பாராட்டிப் பட்டஞ்சூட்டி மகிழ்ந்து நிற்கின்றது. ''ஞானச்சுடர்'' மலரினை மாதந்தோறும் வெளியிட்டுப் பணி செய்கின்றது. தொடக்கத்தில் தன்னடக்கமாக வெளிவந்த ''ஞானச்சுடர்'' இன்று அழகான அட்டையுடனும், தெளிவான எழுத்துக்களுடனும் வெளிவருகின்றது. சந்நிதியான் ஆச்சிரமத்துக்கென்றே ஓர் அச்சுக்கூட வசதி இருப்பதால், அழகாகவும் சிறப்பாகவும் இம்மலரை வெளியிடக் கூடியதாயுள்ளது.

''ஞானச்சுடர்'' நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருகின்றது. சைவ சமயக் கலை, பண்பாடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் மக்கள் விரும்பிப் படிக்கும் விதத்திலும் பார்த்தவர்கள் வாங்கிப் படிக்க வேண்டும் என்னும் தோற்றத்துடனாகவும் இம்மலர் வெளிவரும் என்பதில் ஐயமில்லை. தரமான கட்டுரைகள், பயனுள்ள செய்திகள் மனத்தைப் பண்படுத்தும் அறிவுரைகள் ஆகியவற்றைக்கொண்டு 'ஞானச்சுடர்' வெளி வருகின்றது. இது மேலும் பல பொலிவுகள் பெற்று வெளிவர சந்நிதி முருகன் அருளை வேண்டுகிறேன். தைத்திங்களிலே தோன்றிய இம்மலருக்குத் தற்போது வயது இரண்டு. ஆற்றங்கரையான் அருளாலே மலர் சிறக்க என் வாழ்த்துக்களைக் கூறி இச்சிறிய வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்,
கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

20 - 1 - 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நற்செய்தி!

ஞானச்சுடரை வெளியிடுவதற்கு மட்டும் பயன்பட்டு வந்த சந்நிதியான் ஆச்சிரம அச்சகம் தற்பொழுது தன்னுடைய ஆற்றலை அதிகரித்து பலவகையான அச்சுப்பதிப்பு வேலைகளையும் செய்யக்கூடிய வகையில் தன்னை விரிவுபடுத்தியுள்ளது. ஆகவே அச்சுப் பதிப்பு வேலைகளைச் செய்ய விரும்புகின்ற அன்பர்கள் சந்நிதியான் ஆச்சிரம அச்சகத்துடன் தொடர்பு கொண்டு குறித்த நேரத்தில், தரமான முறையில் தங்களது பதிப்பக வேலைகளைப் பூர்த்தி செய்து நன்மை அடையலாம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். எம்முடன் தொடர்பு கொண்டால் நேரடியாக வருகைதந்து தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தங்களது தொடர்பு உங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் எங்களது ஆத்மீகப் பணிகளது வளர்ச்சிக்கும் தூண்டு கோலாக அமையும் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

-சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரம
## சைவ கலை - பண்பாட்டுப் பேரவை
### தொண்டைமானாறு

ஸ்தாபிதம் 27-09-92

**போஷகர்கள்**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்
(நல்லை ஆதீன முதல்வர்)

ஸ்ரீலஸ்ரீ பண்டிதர் சைவப் புலவர்
கை. நமசிவாயக் குருக்கள்

ஸ்ரீலஸ்ரீ சோ. தண்டபாணிதேசிகர், J. P.
(வல்லை ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரதமகுரு)

பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்
(வல்வை வைத்தீஸ்வரர் தேவஸ்தானம்)

தலைவர்:
க. திருப்பரங்கிரிநாதன்
(இளைப்பாறிய தபாலதிபர்)

செயலாளர்:
ந. அரியரத்தினம்
(அதிபர், யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம. வி)

பொருளாளர்:
செ. மோகனதாஸ்
(நிர்வாகி சந்நிதியான் ஆச்சிரமம்)

உபதலைவர்:
பொ. நடராசா
(வைத்தியசாலை வளாகம், அச்சுவேலி)

உபசெயலாளர்:
பண்டிதர் க. முத்துவேலு

திருவாசகசபை உறுப்பினர்:

க. கந்தசாமி
(ஓய்வுபெற்ற தபாலதிபர், கலைமகள்)

சி. நாகலிங்கம்
(கிராமசபை [illegible])

இசைமணி சி. துரைராஜா
([illegible], தொண்டைமானாறு)

பெ. அருட்பிரகாசம் (அம்மான்)

இ. புஷ்பநாதன்
(கரும்பிராய்)

க. அருள்லிங்கம்
([illegible])

சிற்பக்கலைஞர் கு. சிவசம்பு
(ஆயுள்வேத வைத்தியர்)

வ. லிங்கம்
[illegible]

பிரதம ஆலோசகர்:
சி. சிவலோகம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியிரட்டை மணிமாலை

### காப்பு - வெண்பா

மூக்கண்ணை யார்ந்த மூத்த விபக்கன்று
விக்கினங்க ளெல்லாம் விலக்கிவிடும் — இக்கினிமை
மலரு மிரட்டை மணிமாலை சந்நிதிவாழ்
தொல்குகற்குச் சொல்லத் தொடுத்து.

## நூல்

### வெண்பா

திருவளருஞ் சந்நிதிவாழ் செய்யவடி வேலன்
குருமணியா மெஞ்சிற் குலவ - வருவினைகள்
யன்னியுறு சருகாய் மாழும் நிலையாக
மன்னியிடு மின்பம் மலிந்து. 1

### கலித்துறை

மணியாப் பொருண்மிகு காலை மிடியரின் மாழ்கிமிக
நலியா வுடலுள மீந்துன் திருவடி நற்றமிழாற்
சலியா தறுதின மேத்திடும் பேறது சந்நிதிவாழ்
கலியா ருகந்து வரதா வருளுதி கையனுக்கே. 2

### வெண்பா

கையா றிரண்டுடையான் காவா யுதாமுடையான்
மையா ரயில்சேர் வலமுடையான் — செய்யாருஞ்
சந்நிதிவாழ் பெம்மான் றனிக்கவிடா னெம்மையே
புன்னைவலம் யாவுமகற் கோது. 3

### கலித்துறை

ஓதி யனைக்குரு மான்மய வாவன் றுலைவுந்தயது
பாதி யுமைமயி லாளை யுந்தை படையதின்றித்
நீதி யனைக்கற் செருத்தவன் வெற்றியைத் தேய்த்திடாதோ
சாதி மலர்ப்பொழிற் சந்நிதி மேவருட் சண்முகனே. 4

(தொடரும்......

ஆக்கம் :
'மணிப்புலவன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " ஞானச்சுடர் "

## மார்கழி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :**

1998ஆம் ஆண்டு தைமாதத்தில் ஞானச்சுடரின் முதல் மலரை வெளியீடு செய்துவைத்த வல்லை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் அவர்களே இந்த வருடத்திற்கான இறுதிமலரையும் அதாவது மார்கழிமாத மலரினையும் வெளியீடு செய்துவைத்தார்கள். அவர் தமது வெளியீட்டுரையில் இப்படியான ஒரு நூலை தொடர்ச்சியாக வெளியிடுவதன் சிறப்பை பலகோணங்களில் சுட்டிக்காட்டித் தனது கருத்துக்களை வெளியிட்டார்.

வெளியீட்டுரை பற்றி சபையோர் சார்பில் வெளியிட்ட திரு. வ. இ. நடனசிகாமணி அவர்கள் தண்டபாணிகதேசிகர் அவர்களால் ஆரம்பித்துவைக்கப்படும் காரியங்கள் நிறைவாக நடைபெற்று வருவதனால ஞானச்சுடர் மலரும் நிறைவுடன் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

**ஆய்வுரை :**

தைமாத மலருக்கு ஆய்வுரை வழங்கிய யாழ் பல்கலைக்கழக போதனாசிரியர் திரு. ச. விநாயகமூர்த்தி அவர்களே மார்கழிமாத மலருக்கும் ஆய்வுரை வழங்கியது பொருத்தமானதாக அமைந்திருந்தது. அவர் கருத்துக்கூறும் பொழுது இச்சபையினருடைய நோக்கம் உயர்ந்ததாக இருந்ததால் முதல் மலரே சிறந்ததாக இருந்தது. இன்று அந்த மலர் பலவிதமான வளர்ச்சிகளைக்கண்டு அதைவிடச் சிறந்ததாக வெளிவந்துகொண்டிருக்கிறது எனக்குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடும் பொழுது வாசகர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ரசனைகளையும் உயர்த்துவதற்கு முயற்சிக்கவேண்டும். மலரின் தரத்தினை தங்கள் ரசனைக்கு ஏற்றவிதமாக மாற்றவேண்டும் என நினைக்கக் கூடாது எனவும் குறிப்பிட்டார்.

இவர்கள் மலரினை வெளியிடும் பொழுது ஏற்படுகின்ற செலவினை விட குறைவான விலைக்கு இதனை விற்பனை செய்துகொண்டிருப்பதும் நாம் கவனிக்கவேண்டிய மிகமுக்கியமான விடயம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

T. பாலசுப்பிரமணியம்
( கொழும்பு )

தி. சோமாஸ்கந்தராசா குருக்கள்
( நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் )

ஆ. வடிவேலு
( அதிபர். ஆம்பனை )

V. அரியராசா
( தொண்டைமானாறு )

இ. சண்முகலிங்கம்
( தொண்டைமானாறு )

ஆ. மகேசன்
( அதிபர், பருத்தித்துறை )

சிவா அரிசி ஆலை
( நாவற்குழி )

மு. தர்மலிங்கம்
( உடுப்பிட்டி )

இ. துணிகாசலம்
( கைதடி, வடக்கு )

வ. வேலாயுதன்
( உடுப்பிட்டி, ஆசிரியர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரபன்மனை மயக்கிய இரு குணங்கள்

முருகப் பெருமான் முன்னிலையில் நிற்கின்றான், சூரபன்மன். தனி ஒருவனாக நிற்கின்றான். எல்லாம் இழந்தவனாக நிற்கின்றான். இனி யான் செய்யத்தக்கது யாது? என்ற எண்ணம் கொண்டவனாக நிற்கின்றான்.

சுடர் நெடுந் தனிவேல் அண்ணல் புன்னகை மலர்கின்றார். அவன் முகம் நோக்கித் திருவாய் மலர்ந்தருளுகின்றார்;

"சூரபன்மா! கருமுகிலின் தோன்றி மறையும் மின்னல் போல எம் முன்பு எண்ணில்லாத வடிவங்களைக் கொண்டாய். உன் மாயங்களை எல்லாம் அம்பினால் அழித்தோம். அழிவில்லாத நம் பெருவடிவம் கொள்வம். நன்று காண்பாய்!"

அக்காலம் சூரபன்மன் முன்பு கண் கொள்ளாக் காட்சி, அவன் காட்டுகின்றான். இவன் காண்கின்றான்.

அப்பெருந்தகை, கடல் உலகம் திசை புவனம் அண்டம் வானவர்கள் உயிர்கள் யாவும் ஆறுமாமுகத்து வள்ளல் மேனியில் அமைந்ததன்றி வேறில்லை என்ன ஆங்கு ஒரு திருப்பெரு உருவமானார்.

அத்திருப்பெரு வடிவம் அனந்தகோடி சூரியர்கள் ஒருங்கு திரண்டு உதித்தாற் போன்ற ஒளி உடையது. அளவு கடந்த ஒளிக்கதிர்கள் கான்று பிரகாசித்தது.

அத்திருத்தோற்றம் ஆதியும் அந்தமும் அற்றது. செம்பொற் சோதி மயமாகச் சுடர்வது.

சூர்த்த நோக்குடைச் சூரபன்மன் பார்க்கின்றான். பரவசமானான். விம்மிதம் கொண்டான். தலைப்பட்ட உணர்வினின்றும் தன்னை மீட்டும் தகுதி இழந்து நின்றான்.

கந்தவேள் பெருமான் கருணை காட்டினார். சூரனுக்குச் சிறிது நல்லுணர்வு நல்கினார்.

சூரன் ஞான உணர்வு எய்தப் பெற்றான். தாமத குணத்தில் நின்ற சூரபன்மன் இராச குணத்தினனான். குணம் மாற்றம் அடையச் சூரபன்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தில் மாற்றம் நிகழ்ந்தது. செயலில் மாற்றம் நிகழ்ந்தது. வாக்கிலும் கடுப்பு நீங்கியது. முருகப்பெருமானுடைய வடிவத்தைப் பார்த்து வாழ்த்து கின்றான்.

"பெருவடிவர் காட்சி நல்கும் இப்பெருமான் எல்லையற்ற அவுண சேனையை இமைப்பொழுதில் அழித்தார். விண்ணில் விளங்கும் அண்டங்கள் தோறும் வியன்சமர் புரிந்தார். வல்லமையான் தேரும் வாராது தடுத்துவிட்டார்.

"அறியா வரத்தினேன் ஏவியபடைகளை அழித்தார், யான் கொண்ட மாயங்களை அம்பினால் மாற்றினார்."

"அண்டம் புவனம் அனைத்தும் அமரரும் கண்டிடும் வடிவம் ஒன்று காட்டுகின்றார். என் கண் முன்னே நிற்கின்றார்."

"மயில் மேலழகன் குழந்தை வடிவேலன் அல்லன். எல்லோருடைய மூலத்திற்கும் காரணம் இம்மூர்த்தி. அன்று தனிவேல் பெம்மானை விருப்பு வெறுப்பு அற்ற பராபர முதல்வனாகக் கண்டிலேன். இன்று ஈசன் இவன் என்னும் தன்மையைக் காண்கின்றேன்.

"இத்திருமேனி முழுவதையும் குறித்து நோக்க வல்லார் யார்? தேகம் எங்கும் அளவில்லாத கண்கள் பெற்றவர்களுக்காயினும் அறியலா குமா? அனந்தகோடி கற்பகாலம் கடக்கும் அன்றோ"

"சீர்க் குமரேசன் கொண்ட திருப்பெரு வடிவம் தன்னில் உள்ள ஒளி சிறப்பு இளமை அழகு அனைத்தும் அம்பர உலகில் ஆர்க்குளது! பலமுறை வியந்து பார்க்கின்றேன் இன்றும் என் பார்வை தானும் வெறுக்கவில்லை

"ஆயிர கோடி மன்மதர்கள் திரண்டு ஒன்றாகிப் பொருந்தினாலும் செவ்வேள் பெருமானுடைய மேலான திருப்பாதங்களின் தூய நல்லழ கிற்கு அமையாது! அடிமுதல் முடிவரை எண்ணில்லாத ஊழிக்காலம் எத்தன்மையாக நோக்கினாலும் கண்ணினால் அமையாது. நினைத்தால் மனத்தினால் அடங்காது. எவ்விடத்தில் அமர் கருதி வந்ததெல்லாம் அருள் என நாட்டலாம்.

"என் அறியாமை அகன்றது அறிவு புகுந்தது புவனங்கள் தோறும் பொருந்திய பொருள் இயல்பு புலனாகின்றது. தேவநாயகன் திருவடிவம் தெரியப்பெற்றேன், இது என் நல்ல தவப்பயன் ஆகும்.

"கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னை என் கால்கள் வலம் வரவேண்டும். என் கைகள் கூப்பித்தொழுதிடல் வேண்டும், என் தலை திருவடியை வணங்கிடல் வேண்டும், வாய்வாழ்த்த வேண்டும்,

★ பயங்கரமான பகைவன் மனம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பாவங்கள் பரநாசமாக வேண்டும், நான் மிகப்பரிசுத்தனாகிப் பெருமானின் அடித்தொண்டு செய்யும் தொழும்பனாக வேண்டும், எனக்குப் பரலோக வாழ்வு சித்திக்க வேண்டும், என்னுயிர் நிலையான நற்கதி அடைய வேண்டும்''.

''என் நெஞ்சை எதுவோ நடுக்கின்றது. நல்லெண்ணத்தைக் கெடுக்கின்றது. மாயம் என்னை ஆட்டிப் படைக்கின்றது. மற்றது எல்லாவற்றையும் மறைக்கின்றது. மானம்...... மானம ..... மானம் ....''

''மூளிய வேண்டிய முருகன் முன் நின்று உருகுகின்றேன். உடலும் உணர்ச்சியும் என் வசத்தன அல்லவோ .......''

''புகழுடம்பு என்றும் நிற்கும் புலால் உடம்பு நிற்பதில்லை. வள்ளலை வணங்கி, இந்த ஊன் உடலம் உயிரைப்போற்றி அவியர் போல் ஆவேனோ? ஆயிரகோடி அண்டமும் போனதோர் புகழும் வீரத்தன்மையும் பொன்றிடாவோ !!

பாவம்! சூரபன்மன் என் செய்வான்; அவன் ஆட்டுகின்றான். இவனால் ஆடாமல் இருக்க முடியுமோ

சூரபன்மனிடத்தில் குணமாற்றம் நிகழுகின்றது. தாமத குணம் தலை தூக்குகின்றது குணம் மாற்றம் அடையச் சொல்லும் செயலும் மனமும் மாறுபடுகின்றன.

நினைப்பிற்கும் எட்டாத நின்மல மூர்த்தி நின்ற ஒரு பெருந் தோற்றத்தை மாற்றினார். அழகிய தோகையோடு பொருந்திய மயில் மேலழகரானார்

அண்டாதிபதிக்கு அருளிய மெய்ஞ்ஞானம் மறைந்தது. அஞ்ஞானம் குடி கொண்டது.

திரை நீக்கமும் மறைப்பும் திருமூலர் வாக்கில் வரும் திறம் இது

''மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள் (2548)

மெய்ஞ்ஞானத்தில் நின்ற சூரபன்மன் அஞ்ஞானியானான். சித்தத்தில் சீற்றமும் சென்ற பகையும் திரும்பியது.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரனைக் கண்டான். சாலவே சமரின் மேல் ஊக்கம் செலுத்தினான்.

தனக்குள் நிகழ்ந்த குணமாற்றத்தைக் குறிக்கொண்டான் அவுணன். அங்கையோடு அங்கை தட்டினான், மணிமுடி துளக்கினான், ஏளனமாகச் சிரித்தான். செப்புகின்றான்.

---

★ அதிக போதை ஊட்டுவது காமம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழந்தை வடிவங் கொண்ட கள்வன் என்னுடன் சமர் புரிய ஆற்றான், மாயவித்தை ஒன்று காட்டி என்னை மயங்க வைத்தான். ஆயதை அகற்றின் ஆர் எனக்கு ஒப்பாவார்? மாயமது அழிவில்லாதேன் கருத்து அழிகின்ற துண்டோ! என்று சமர்மேல் கருத்தைச் செலுத்தினாள்.

புதுநிலை பெற்ற சூரன் பழைய நிலைக்குத் தள்ளப்பட்டான்.

அதுவே குணம், குணத்திற்கு ஏற்ற கொள்கையுடையவன் மனிதன். குணங்கள் மூன்று. இராசதம், சாத்துவிகம், தாமதம் என்பன அவை. எல்லோரிடத்திலும் முக்குணங்களும் பொருந்தி இருக்கும், எந்த வேளையில் எக்குணம் மேற்கொள்ளுகிறதோ அக்குணத்திற்குரிய செயல் நிகழும். குணத்தை அடிமைப்படுத்தி விடலாம் என்று எண்ணலாம், அது நடைமுறையில் சாத்தியமாவது அருமை.

ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு அரசனான சூரபன்மனே குணத்தில் நின்று கூத்து ஆடினான் என்றால் ஏனையவர் எம்மாத்திரம்.

சாத்துவிக உணவு, நல்லாரிணக்கம், திருக்கோயில் வழிபாடு, தெய்வ சிந்தனை ஆகிய பயில்வினால் சாத்துவிக குணத்தை வளர்க்கலாம். குணத்திற்குரிய செயல்கள்: இராசதம்;- தானம், தவம், மெய்ம்மை தருமம் பேணல், ஞானம், கல்வி, கேள்வி ஆகியன.

தாமதம் :- பேருணவு, ஒடுங்கல், சோம்பு, காமம், நீதிகேடு, நித்திரை மறதி, வஞ்சம் முதலாயின.

சாத்துவிகம் :- ஞானம், தவம், மெய்ம்மை, மேன்மை, அருளுடைமை, புலனடக்கம் என்பன.

சிவ. சண்முகவடிவேல்

---

## மனிதத்துவம்

பித்தளைப் பாத்திரத்தின் மேல் களிம்பு உள்ளது. அதனைத் துடைத்து எடுக்கும் பொழுதுதான் அது துலங்குகின்றது அதே போலத்தான் மனிதன் மீதும் அறியாமை, அகந்தை, ஆணவம் போன்ற களிம்புகள் உள்ளன. இவற்றை அறிவு, சிந்தனை போன்றவற்றைக் கொண்டு அகற்றும் பொழுதுதான் மனிதன் மனிதத்தன்மையுடன் வாழ்கின்றான். அவனிடமுள்ள மனிதத்துவம் பிரகாசிக்கின்றது.

மலர் வெளியீட்டில் நல்லை ஆதீன முதல்வர்
ஆற்றிய உரையிலிருந்து

---

★ சிறந்த தர்மம் சுயநலமற்ற சேவை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை நிலையாமை

இவ்வுலகில் தோன்றியதெல்லாம் மறையும். அஃதாவது பிறப்பு உண்டேல் இறப்பு நேரிடும். இது யாவரும் அறிந்த உண்மையே. ஆனால், மனிதன் இந்த உண்மையை உணர்ந்ததாகத் தெரியவில்லை. காலைக் கதிரவன் ஒளியைக் கண்டு மலர்ந்த அழகிய மலர், மாலை நேரத்தில் வாடி விடுகின்றது. நேற்று நேர்த்தியாக வாழ்ந்த நண்பன் திடீரென நம்மை அறியாமலே மரணமடைந்து விடுகின்றான். இதென்ன கொடுமை என்று அழுகின்றோம்; அல்லலுறுகின்றோம். ஏன்? நம் காட்சிக்குப் புலப்படும் பொருட்களை நிலையானவை என்று நினைந்து அகமகிழ்கின்றோம். ஆனால் தெய்வப்புலவர் வள்ளுவர் கூறுகிறார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு" என்று.

ஆனால் மக்களோ கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நினைத்து தமது வாணாளை வீணாக்குகின்றனர். நாமெல்லாம் வாழப் பிறந்தவர்களென்று இருந்த போதிலும் வாழ்க்கையின் இறுதி நாளை அறிய முடிவதில்லை. ஆகவே தான் பண்பட்ட உள்ளங்கொண்டவரும், உலக வாழ்வை நன்கறிந்தவருமாகிய பட்டினத்தார் "காயமேயிது பொய்யடா காற்றடைத்த பையடா" என்று கூறினார். மேலும் சமயத் துறையில் ஆணித்தரமான புரட்சிகரக் கருத்துக்களைப் படைத்துத் தந்த தாயுமானவரும்,

"என்று மழியுமிக் காயம் — இதை யேதுக்கு மெய்யென் றிருந்தீர்
உலகில் ஒன்று மறியாத நீரோ யமனோலை வந்தால்
சொல்ல உத்தர முண்டோ" என்று எடுத்துரைத்தார்.

இவற்றினால் வாழ்வே மாயமென்றும் அது மண்ணாவது திண்ணமென்றும் அறியலாம்.

ஆங்கில நாட்டு அறிஞர் ஒருவர் "Death is a great leveller" என்றார். எனவே கூற்றுவன் பிடியிலிருந்து தப்பிப் பிழைக்க முடியும் என்று ஒருவன் நினைத்தால் அது நெருப்பாற்றில் மயிர்ப்பாலம் போட்ட கதையாகத்தானிருக்கும். செல்வச் சீமானாயிருப்பவனைப் பலரும் சுற்றித் திரிவர், செல்வாக்குள்ளவனையும் அப்படியே சுற்றித் திரிவர். ஆனால், இவர்கள் தம் நிலையிலிருந்து சற்று நலிவு உற்றால், அவனது செல்வம் அழிந்தொழிந்து விட்டால் அவனை எவரும் ஏறெடுத்துப் பார்க்க

மிகத் தீய குணம் கோபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார்கள். இதனையே தாயுமான சுவாமிகள், "தந்தை, தாய், தமர், தாரம், மகவு இவையெல்லாம் சந்தையிற் கூட்டம், இதிலோர் சந்தேகமில்லை" எனக் கூறினார்.

கருவிலே திருவுடையானாகிய திருமூலரும்

"ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே" என்று விளக்கினார்.

இந்நிலையில், மண்ணிற் பிறந்தவர்கள் வாழ்ந்து மடிவதே இயற்கையெனினும், இறக்கு முன்னால் புகழை எய்தி அதனை நிலை நாட்டுதல் தலையாய கடமையாகும். இதற்குச் சிறந்த ஒரு அடிப்படைப் பண்பே அன்பு என்பதாகும். ஆணவப் பேயை மாய்த்து அன்பு என்னும் அருமை மலரைத் தன்னகத்தே கொள்பவனே மனித உருக்கொண்ட இறைவனாவான்.

ஆணவக் கோலத்தைக் கொண்டு அகிலத்தை அடக்கியாண்டவர்களும், ஆளக் கருதுபவர்களும் மாண்டனர். மாளவுஞ் செய்வர் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். ஆகவே, அகத்தே அன்புள்ளவன் உலகில் வாழ்பவன். ஏனையோர் செத்தாருள் ஒருவராக எண்ணப்படுவான்.

தமிழக வரலாற்றில் மூவேந்தரும் முரண்பட்டனர். படையெடுத்தனர். பல உயிர்களைப் போக்கினர். இவர்களிடையே மூண்டெழுந்த பகைமை உணர்ச்சியை, பாநலஞ் சார்ந்த பாவேந்தர் தீர்த்து வைத்தனர். இயற்கையின் விநோதத்தால் அறிவின் ஊன்றாகச் சிலரும், அருளின் வடிவாகச் சிலரும் வாழ்ந்தனர். அவர்கள் அன்பினால், பண்பினால், மக்கள் மனத்தில் இடம் பெற்று மறையாத மாண்பு பெற்றனர். ஆகவே தான் வள்ளுவப் பெருந்தகையும்,

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்று அறைந்துள்ளார்.

சமய குரவர்கள், புத்த பகவான், யேசுநாதர், முகமது நபி, தாயுமானார், இராமலிங்க அடிகள், காந்தியடிகள் முதலியோரின் வாழ்வு அன்பின் வடிவமானது; அறவடிவானது; அருள் வடிவானது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

ந. சிவபாதம் "புத்தொளி"
ஆனைக்கோட்டை.

தலை சிறந்த பொருள் அன்பம்

யாழ்ப்பாணம்

# பஞ்சமுக ஆஞ்சநேயர் தோன்றிய வரலாறு

போரில் இந்திரஜித் மாண்டது ராவணனை நிலைகுலையச் செய்தது. எனவே அவன் ராம லட்சுமணர்களை அழிப்பதற்கு மயில் ராவணனின் உதவியைப் பெற நினைத்தான்.

ராவணன் நினைத்த மாத்திரத்திலேயே மயில் ராவணனும், அவன் தம்பி ஐராவணனும் பாதாள லோகத்திலிருந்து இலங்கைக்கு வந்து சேர்ந்தார்கள்.

மயில் ராவணனையும், ஐராவணனையும் கண்ட ராவணன் மகிழ்ச்சி அடைந்தான். அவர்களிடம் அவன் இராம லட்சுமணர்களால் தன்னுடைய ஆட்சி அழிக்கப்படுவதைக் கூறிக் கலங்கினான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்ட ராவணன் கண்ணீர் சிந்துவதைக் கண்டு மயில் ராவணன், "ராம லட்சுமணர்களைப் பற்றி நீங்கள் கவலையோ, கலக்கமோ கொள்ள வேண்டாம். எங்கள் மாயா சக்திக்கு முன்னால் அந்த பாலகச் சிறுவர்கள் எம்மாத்திரம்! இன்று இரவோடு இரவாக அவர்களைப் பாதாள லோகத்திற்குத் தூக்கிச் சென்று நாளை விடியற் காலைக்குள் அந்த இருவரையும் காளிதேவிக்குப் பலியிடுகிறேன், பாருங்கள்!" என்று கூறினான்.

அதைக் கேட்டு சஞ்சலம் நீங்கிய ராவணன் புத்துணர்ச்சியோடு அரண்மனை திரும்பினான்.

அவர்களின் சதித் திட்டத்தை ஒற்றர்களின் உதவியால் விபீஷணன் அறிந்து கொண்டான். அவன் ஆஞ்சநேயரை அழைத்து விவரம் கூறினான்.

விபீஷணனும் ஆஞ்சநேயரும், மயில் ராவணனின் சதித்திட்டத்தை முறியடிப்பதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்தார்கள்.

அதன்படி வானர வீரர்கள் ராம லட்சுமணர்களைச் சுற்றி பலத்த பாதுகாப்போடு நின்றிருந்தார்கள். ஆஞ்சநேயர் ராம லட்சுமணர்கள் துயில் கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றார். அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் அவர்களைச் சுற்றி தம்முடைய வாலால் ஒரு பெரும் கோட்டை கட்டினார். கோபுரம் போல் அமைந்த அந்தக் கோட்டையின் மேற்புறம் ஏறி அவர் அமர்ந்து கொண்டார்.

பாதாள மன்னன் மயில் ராவணன் தனது மாயா சக்தியைப் பிரயோகித்தான். அதன் விளைவாக அனைவரும் நித்திராதேவியால் ஆட்கொள்ளப்பட்டனர். இதுதான் சமயம் என்று மாயாவியான மயில் ராவணன் ராமலட்சுமணர்களைத் தூக்கிக்கொண்டு பாதாளலோகத்திற்குச் சென்றான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அனைவரும் மயக்கம் தெளிந்தனர்.

ஆஞ்சநேயரும், விபீஷணனும், சுக்ரீவனும், ராம, லட்சுமணர்களைக் காணாமல் திகைத்தனர்.

மாயாவிகளின் மாயா சக்தியை உணர்ந்த ஆஞ்சநேயர், ராம லட்சுமணர்களைக் காப்பாற்றுவதற்கு வாயு வேகத்தில் பாதாளலோகம் நோக்கிப் புறப்பட்டார்.

வழியில் அவர் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவற்றையெல்லாம் அவர் ஸ்ரீராமர் கிருபையாலும், தமது பராக்கிரமத்தாலும் முறியடித்தார்.

★ மிகச் சிறந்த மனிதன் அன்புள்ளவன். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளலோகத்தில் அவர் சந்திரசேனையைச் சந்தித்தார்.

சந்திரசேனை ஆஞ்சநேயரிடம், "சுவாமி! அந்தப்பாவி ராவணன் என்னைச் சிறைப்படுத்தி, தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினான். அவனிடம் நான், 'ராமபாணத்தால் நீ அழியப் போவது நிச்சயம்' என்று கூறினேன். அதற்கு அந்தத் துரோகி தனது உயிரின் ரகசியத்தைப் பற்றிய உண்மையை என்னிடம் கூறி, 'இந்த ராவணனை அழிக்க எவராலும் முடியாது' என்று வீரம் பேசினான். நீங்கள் பாதாள லோகத்தில் மகரக் குகையில் இருக்கும் ஐந்து வண்டுகளைக் கொன்றால்தான் மயில் ராவணர்களை வெல்ல முடியும்" என்று தெரிவித்தாள்.

ஆஞ்சநேயர் அவளிடம், "தாயே, தைரியமாக இருங்கள். இப்போதே நான் சென்று அந்த வண்டுகளைக் கொன்று - மயில் ராவணர்களை அழித்து உங்களைக் காப்பாற்றுகிறேன்" என்றார்.

"சுவாமி! மிகுந்த பணிவுடன் என்னுடைய ஒரு வேண்டுகோளை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். அரக்கர்களை அழித்து ஸ்ரீராமர் வெற்றியுடன் இலங்கைக்கு எழுந்தருள்வார். அப்போது அவரைத் தரிசிக்கும் பாக்கியத்தை எனக்குத் தந்தருளும்படி பிரார்த்திக்கிறேன்" என்று சந்திரசேனை கேட்டுக்கொண்டாள்.

"அன்னையே, உங்கள் எண்ணம் ஈடேறும்" என்று கூறிய ஆஞ்சநேயர், அவளிடமிருந்து விடைபெற்று மகரக்குகையை நோக்கி விரைந்தார்.

ஆகாய மார்க்கமாக ஆயிரம் யோசனை தூரத்திலுள்ள ஏழு கடல்களைக் கடந்து, நெருப்புப் பிழம்புபோல் ஜொலித்துக் கொண்டிருக்கும் தீவுக்கூட்டத்தை அவர் அடைந்தார்.

அங்கு ஒரு பெரும் மகரக்குகை இருந்தது. ஆஞ்சநேயர் அக்கினி தேவனைத் தியானம் செய்தார். ஆதலால் அங்கிருந்த நெருப்பு அவரைச் சுடவில்லை.

ஆஞ்சநேயர் ஒரே சமயத்தில் ஐந்து வண்டுகளையும் கொல்வதற்காக பஞ்சமுக ஆஞ்சநேயராக வடிவம் கொண்டார்.

ஒரே சமயத்தில் அவர் ஐந்து வண்டுகளையும் ஐந்து வாயில் போட்டுக் கடித்துக் கொன்றார்.

அதே சமயம் போர்க்களத்தில் ராமபாணத்தால் மயில் ராவணர்களின் மாயத் தோற்றங்கள் அழிந்து, அரக்க சகோதரர்கள் இருவரும் மாண்டனர்.

---

★ மிகவும் கெட்டவன் சுயநலக்காரன். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து முகங்களுடன் இருந்த ஆஞ்சநேயரின் முன்னால் சிவபெருமான் ஆனந்தமூர்த்தியாக எழுந்தருளினார்.

"ஆஞ்சநேயா! பஞ்சமுக ஆஞ்சநேயராக அவதரித்த உனது இந்தத் தோற்றத்தை நினைப்பவர்களுக்கும், தோத்திரம் சொல்பவர்களுக்கும், பூதப் பிசாசுகளாலும் மற்றக்கொடிய விலங்குகளாலும் எவ்வித துன்பமும் நேராது. நீ சிரஞ்சீவி அனுமானாக எப்போதும் வாழ்ந்திருந்து எங்கும் மங்களத்தைப் பெருக்குவாயாக!" என்று கூறி சிவபெருமான் அருள் புரிந்தார்.

ஆஞ்சநேயர், சிவபெருமானை வலம் வந்து வணங்கினார்.

வெற்றிப் பெருமிதத்துடன் அவர் விண்வழியாகப் புறப்பட்டு ராம லட்சுமணர்களின் முன்னால் வந்து நின்றார். மயில் ராவணர்கள் மாண்ட செய்தியை அறிந்து மகிழ்ச்சி அடைந்தார்.

ஸ்ரீராமபிரான் ஆஞ்சநேயரை அன்புடன் கட்டித் தழுவிக் கொண்டார்.

மயில் ராவணன் மாண்ட செய்தி பாதாளலோகம் உட்பட எங்கும் பரவியது. எல்லோரும் மகிழ்ச்சியால் குதூகலித்தார்கள்.

சந்திரசேனை எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தாள். ஸ்ரீராமபிரானைத் தரிசிக்க வேண்டும் என்று அவள் மனம் துடித்துக் கொண்டிருந்தது. அவள் ஸ்ரீராமநாமத்தை சதாசர்வகாலமும் ஜபம் செய்தபடியே இருந்தாள்.

ஆஞ்சநேயர் ராம லட்சுமணர்களிடம் நடந்த நிகழ்ச்சிகளை விளக்கமாகக் கூறியதோடு, சந்திரசேனையின் தூய பக்தியைப் பற்றியும் தெரிவித்தார்.

அவர் ராம லட்சுமணர்களை அழைத்துக் கொண்டு சந்திரசேனையிடம் சென்றார்.

சந்திரசேனையின் தூய பக்தியைக்கண்டு ஸ்ரீராமரின் உள்ளம் உருகியது.

சந்திரசேனை, ஸ்ரீராமனையும் லட்சுமணனையும் பலமுறை வலம் வந்து வணங்கினாள்.

இவ்விதம் சந்திரசேனைக்கு ஸ்ரீராமர் தரிசனம் தந்து அருள் புரிந்தார்.

தொகுப்பு:
'சந்நிதியான் ஆச்சிரமம்'

விலையுயர்ந்த பொருள் ஆசையின்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்முகமாகுக

அறிவு கண்ணாடி விளக்குச்சுடர் போன்றது. மனம் கண்ணாடி போன்றது. மலமாகிய கண்ணாடியைக் கழுவித் தூய்மை செய்தால் அது அறிவுச் சுடரை மேலும் பிரகாசிக்கச் செய்யும்.

மனதைத் தூய்மை செய்யாதபோது, அழுக்குப் படிந்த கண்ணாடி போல், அறிவுச்சுடரை அப்பிரகாசம் செய்து புகைப்படலத்தால் மூடி மங்கவைத்துவிடும். மனம் ஒரு பேய் அதற்கு நல்ல பலி பூசை செய்தால் பெரிய உதவி செய்யும். பூசை செய்வதில் சற்றுத்தவறினால் நன்றி கெட்ட மனப்பேய் பூசாரியைத் தீர்த்துக்கட்டிவிடும்.

ஆலயங்களில் ''பலிபீடம்'' வைப்பதன் நோக்கம் என்ன? நாம் செய்யும் பாவங்கள், பாதகங்கள் வஞ்சகங்களை எல்லாம் ஒவ்வொரு நாளும் சென்று பலிபீடத்தில் பலியிட்டு வருவதற்கே அது உள்ளது. நித்தியபலி, விசேடபலி என இது இருவகைப்படும். சாதாரணமாக எப்பவும் எவரும் கொடுக்கும்பலி நித்தியபலி விசேடமாக ஓமத்துடன் விசேட காலத்தில் நடைபெறுவது விசேடபலி.

பூ + செய் = பூசை. பூக்களால் செய்யப்படுவது பூசை ஆகும். பூக்களுக்கு மூன்று தன்மையுண்டு. ஒன்று நிறம் மற்றது மணம், இன்னொன்று அழகு. எனவே சத் + சித் + ஆனந்தம் ''பூ'' என்றால் நிறமும் அழகும் சித்தத்தை ஆனந்தப்படுத்தும். மனம் சத்துப் பொருளை விளக்கும். அதனாலேயே பூசைக்கு பூக்களை எடுப்பது. இதனை ஆகமம் சாராத பக்திமான்களும் கையாண்டு பூசைபண்ணலாம்.

''சலம் பூ வொடு தூபம் மறந்தறியேன்''
என்று அப்பர் பாடினார்

ஏன் பூசை செய்கின்றோம். மனத் தூய்மைக்கே.

மனம் நன்மைக்கே உரியது. அதனைத் தூய்மை செய்து பேணல் வேண்டும். தூய்மை செய்யாத வழித்தீமை செய்யும். பழங்கால குதிரையை வண்டியில் பூட்டினால் அது பின்னுக்கு இழுக்கும். அறிவைப் பயன்படுத்தாதபோது மனம் அதனைப் பின்னுக்கு இழுக்கும். அறிவைத் தூய்மைசெய்ய மனமும் தூய்மையடையும்.

''மனத்தின் கண் மாசு இலன் ஆகுக'' என்பது தேவர் கட்டளை. ''மனிதனை ஈஸ்வரன் மனமென்னும் மாயாமந்திரத்தால் -- யந்திரத்தால் ஆட்டிப்படைக்கின்றான்.'' கீதை உபதேசம் இது மனத்தை அறிந்தால் மந்திரம் ஏது?

---

★ மிகப் பலமுள்ள மனிதன் பொறுமைசாலி. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அறிவு என்பது அறி + உ = அறிவு ஆகின்றது. அகமுகமாகுதலே அறிவின்பயன். அகமுகமாகுதற்கு, முருகப் பெருமானின் வேல் ஒன்றே போதும். வேலுக்கு மூன்று தன்மைகளுண்டு. அகன்று விரிந்து, கூர்ந்து ஆழ்ந்து, பதிந்தல் அதன் இயல்பு. மனதை அகன்று விரிந்து கூர்ந்து, ஆராய்ந்து பதிந்தல் அறிவுக்கு விருந்து. அதனை அடிப்படையாகக் கொண்டு வேலை வணங்கு. வினை அகலும், பிறவிகெடும், பேரின்பவாழ்வு வரும்.

முருகு:- அறிவு, அழகு, விரிவு, புகழ், இறைமை, பெருமை பல்வபு யுன்றி.

இதன் பெருமையை உணராதவன் சூரன் - சூரனை கிழித்துப் பிளந்து சேவலை செய்யலாகத்தது வேல். இவ்வேல் அமைந்த சந்நிதியில் நாம் நிம்மதியடைகிறோம். ஆத்மப் பயிருக்கு ஊட்டம் பெருகுவது அறிவுப் பொருள் வேல், எது இங்கு காணப்படுகின்றதோ அது பரலோகத்திலும் என்று வடமொழி ஸ்ருதி கூறும், உலக வடிவமான அண்டத்திலும் எது காணப்படுகின்றதோ அதே உடலான பிண்டத்திலும் காணப்படுகின்றது. அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களுக்கு மேலே உள்ளது ஆத்ம சொரூபம். ஐந்து பிரகாரங்களுக்குள்ளே ஐந்து வாயிற்படிகளுள்ளே உள்ள திருக்கோவிலில் உள்ளது மூலத்தான இலிங்கம், எம் உடலில், கண், காது, மூக்கு, நாக்கு, தோல், ஐந்து ஞானேந்திரியங்களிலும் வாக்கு, கை, கால், [illegible], மலத்துவாரம் என்னும் கர்மேந்திரியங்களிலும் துவாரங்களாக அமைந்துள்ளன. இவ்வாறே திருக்கோவில்கள் கோபுரத் துவாரங்கள் அமைந்துள்ளன. பல தாமரை இதழ்களால் மூடப்பட்ட இதயக்குகையே சிவன் இருப்பிடமாகும். அது போல் பலதுவாரங்கள் கடந்து கருவறை சென்றே மூலத்தானமூர்த்தியை காணமுடியும்.

இதயம் எவ்வாறு நுட்பமாக உள்ளதோ அவ்வாறே மூலத்தானமும் மிக சூட்சுமமானது. நமது உடலில் ஒவ்வொரு உறுப்பிலும் தேவதைகள் தங்கியுள்ளனர். நாதவடிவமான திவசிது ஒலி நமக்கு கேட்கப்படுவது போல திருக்கோவிலில் மணிஒலி கேட்கின்றது.

முகத்தில் செவி அகத்திலுள்ள கருவறையிலுள்ள குழந்தையைப் போலவும், இரு கண்ணும் மூக்கும் சேர்ந்தால் ஆண்குறி போலவும், இதழ்கள் இரண்டும் சேர்ந்தால் பெண்குறி போலவும் அமைந்திருத்தலைக் காணலாம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது விண்ணோர் வாக்கு எனவே அகமுகமாகுக.

சுபமஸ்து.

சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் B. A
தெல்லண்டை, பத்திரகாளி பிரதமகுரு
தும்பளை, பருத்தித்துறை

★ மிகவும் பலவீனமுள்ளவன் முற்கோபக்காரன். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாற்றையும்

# கிழக்குப் பாகத்தில் அமைந்துள்ள கிரேதகாயுகம் பற்றிய வரலாற்றையும்

புலிப்பாணி முனிவர் தன் பாக்களின்மூலம் விளக்குகிறார்.

---

[முற்றொடர்ச்சி...

கிழக்குப்பாகம் (கிரேதகாயுகம்)

விளம்புகிறேன் மேருவுக்குக் கிழக்கேயப்பா
விதமான மனிதர்கள் தாம் நீலவண்ணம்
தளம்புகிறேன் உயரமது நானூறாகும்
தயவாக நாவற்கனி யுதந்நேரோட்டே
கிளம்புகிறேன் அருந்துவது மிதுதானப்பா
கிருபையுள்ள விஷ்ணுவே தெய்வமாகும்
நளம்புகிறேன் வயது நானிரண்டுலட்சம்
நலமில்லா வசத்தியங்க ளில்லைத்தானே. (3)

மேற்குப்பாகம் (துவாபரயுகம்)

இல்லான மேருவுக்கு மேற்கே யப்பா
இருப்பார்கள் மனிதரப்பா விரந்தவண்ணம்
வல்லான உயரமது நாற்பதாகும்
வகையான மாங்கனியும் மதந்நேரோட்டே
எல்லாரு மருந்து வது மிதுதான் பாரு
இதமான பராசக்தி தெய்வமாகும்
சல்லான வயதுதான் லட்சமாகும்
சார்வான சத்தியமும் பொய்யில்லையே. (4)

ஆண்டவனை படைத்த சூரபதுமன் இராவணேஸ்வரனாதியோர் பெருந்தவஞ் செய்து எல்லோரையும் ஒப்ப நோக்கும் இறைவனிடத்தும் பெற்ற அரிய வரங்களினால் வான நாட்டரை அடிமைப்படுத்த அவரது துன்பத்திற்கு இரங்கிய காவற் கடவுள் மண்ணிடை யுதித்து அசுரரை யடக்கிய கதைகளைக் கூறும் நூல்களே நமது புராண இதிகாசங்களாகும். இவற்றை யொப்ப எபிரேய சாதியாரின் புராணமாகிய விவிலிய பூர்வ பாகம் அச்சாதியாரின் அடிமைத் தனத்தையே பெருகக் கூறுகின்றது.

---

★ மிகுந்த விசாரமுள்ளவன் பேராசைக்காரன். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை ஆதாரமாகக்கொண்டு ஆராயுங்கால் எபிரேபியசாதியார் எகிப்தியராலும் பபிலோனிய ஆதரேயராலும் பிலிஸ்தினிய ரதாதியோராலும் அடிமைப்படுத்தப்பட்டார்களென்றும் தம்மை யடிமையாக்கிய சாதியாரிடம் இருந்து நாகரிக முறையைப் பயின்று கொண்டார்களென்றும் தெரிய வருகின்றது. சுருக்கமாகிய இவ்வாராட்சியில் இச்சாதியாராவது சரித்திரத்தைப் பெருக ஆராய இடமில்லையாதலின் இவர்களுடைய அரசருள் மிகச் சிறந்த சாலோமோன் அரசனுடைய காலத்தைப் பற்றி ஒரு சிறிது மட்டும் குறிப்பிடுவாம். மேலும் விடுவாநந்தர் ஆய்வின் பிரகாரம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உயர்ந்த நாகரிகம் படைத்தவர்களாக இருந்திருக்கவேண்டுமென்பது புலப்படுகின்றது. உலகில் நாகரிகம் ஏற்பட்ட காலத்துக்கு முற்றெல்லை கூறுவது ஒருவராலும் இயலாததொன்றாகும்.

மத்ஸ்ய புராணத்தில் சலப்பிரளய வரலாறு பின்வருமாறு கூறப்படுகின்றன. றகொசின் தமது நூலிலே காட்டுகிறார். சத்திய விரதன் என்னும் திராவிட மன்னன் மலையாளத்தில் ஓடுகின்ற கிருதமாலா என்னும் நதிக்கரையிலே தன்முன்னோர்க்கு நீர்க்கடன் செய்யும் பொழுது அவன் கைத்தலத்திலே ஒரு சிறு மீன் அகப்பட்டது. மன்னன் காவற் கடவுளாகிய மாயோனை வழிபடுவோன். அக்கடவுளே சிறுமீன் வடிவாக அவன் கையைச் சேர்ந்தார். சலப்பெருக்கிலே அவர்கள் கிழக்குப் பாகத்தினை அடைந்து பலுகிப் பெருகி. அவ்விடத்தில் வசித்த காலத்தினை திரேதாயுக மென்றனர். அத்திரேதாயுகத்திற்குரிய சனங்கள் நீலவண்ணத்தினரென்றும் நாலூறு முழமுடையோரென்றும் இரண்டு இலட்சம் வருடங்களைத் தாமது சீவிய காலமாகவுடையோரென்றும் விஷ்ணுவை வழிபடுவோரென்றும் நாவற்கனியினையே புசிப்போரென்றும் அசத்தியமில்லாதோரென்றும் மேலேகாட்டிய விளம்புகிறேன்.......... அசத்தியங்கனிந்தாமே என்னும் செய்யுளாலறியலாம். இத் திரேதாயுகத்தில் வசித்தோர் சத்திரியர் என்றழைக்கப்பட்டனர். ஞான வழியின் படி அவர்களை யோகிகளெனலாம். இத்திரேதாயுகத்தில் இராவணன் குரு உபதேசம் பெற்று நிஷ்டையை மூடித்து இடை, பிங்கலை, சுளிமுனை என்னும் மூன்று நாடிகளையும், சுளிமுனை ஸ்தானத்தில் முப்புரி நூலாகத் திரித்து கட்டினோரை திரேதாயுகத்திற்குரிய பிராமணர் போல் மதித்தனர். இந்நான்கு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் நிறம், குணம், செய்கை காரணமாக அவர்களின் நிறத்திற்கேற்ப வர்ணங்களாக வகுத்துள்ளனர். அதற்கேற்ப பிராமண, சத்திரிய, வைசியர், சூத்திரர் என வகுத்து நான்கு குலமுறை வர்ணாச்சிரமமாக வகுத்து அதை அடியாகப் பின்வந்த மனிதர்கள் தங்கள் சாதி வாதிக்கேற்ப பல சாதிகளை வகுத்து வந்தனர்.

---

★ திருப்தியில்லாத பிச்சைக்காரன் ஆசையுள்ளவன். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய சத்திரியர் வசித்தகால திரேதாயுகத்தின் சுற்றில் (1296000 வருடங்களின் பின்) ஒரு சலப்பிரளயம் உண்டாயிற்று. அதனால் மேரு மலையின் கிழக்கில் வசித்தயாவரும் அற்றுப்போக மனு என்பவனும் அவன் குடும்பத்தோரும் மாத்திரம் தப்பியோடி அம்மலையின் மேற்குப் பாகத்திற் போய்த் தங்கினர். அதனை அக்கினி மண்டலமென்பர். அவர்கள் அம்மலையின் மேல் பாகத்தினை அடைந்து பல்கிப் பெருகி வசித்த காலத்தினை துவாபரயுகம் என்றனர்.

அத்துவாபர யுகத்திற்குரியோர் இரத்த வண்ணத்தினரென்றும் நாற்பது முழமுடையோரென்றும் ஒரு லட்சம் வருடங்களைத் தமது சீவிய காலமாகவுடையோரென்றும் பராசக்தி வழிபாடுடையோரென்றும் மாங்கனியைப் புசிப்போரென்றும், மிகுந்த சத்தியவான்களென்றும் மேலே காட்டிய "இல்லானை. மேருவுக்கு ....... ...... பொய்யில்லாரே" என்னுஞ் செய்யுளில் அறியலாம். இத்துவாபர யுகத்தில் வசித்த மனித வர்க்கத்தினரை 'வைசிகர்' என அழைத்தனர். அவர்களை ஞானவழியின் படி, கிரியையாளர் எனலாம். இந்த யுகத்தில் தான் பாரத யுத்தமும் நடந்ததென்பர்.

வைசியர் வசித்த காலமாய துவாபர யுகத்தினிறுதியில் (864000 வருடங்களின் பின்) ஒரு சலப்பிரளயம் தோன்றிற்று. அதனால் அந்த யுகத்துக்குரியோர் பலரும் அற்றுப் போக மனுவென்னுமொருவரும் அவர் குடும்பத்தோர் எட்டுப் பேரும் மாத்திரம் தப்பியோடி மேருமலையின் தென்பாகத்தினை அடைந்து அவ்விடத்தில் வசித்தனர். அதனை பிருதுவி மண்டலமென்பர். அக்கினி மண்டலத்திற்கும் பிருதுவி மண்டலத்திற்கும் இடையில் அப்பு மண்டலமிருக்கின்றது. (தண்ணீர் மண்டலம்) இந்த மண்டலத்திலும், நீர் மனிதரென்றும் ஓர் வகைச் சனங்கள் இருப்பதாகச் சரித்திரங்கள் கூறுகின்றது. இவர்கள் மீன் வர்க்கங்களைப்போல் தண்ணீரில் மாத்திரம் சீவிக்க முடியும். தண்ணீரிலிருந்து வெளியே வந்தார்களேயானால் சிறிது நேரத்தில் இறந்து விடுவார்கள். பிருதுவி, தேயு, வாயு, ஆகாசம் என்னும் மண்டலங்களிலுமுள்ள சனங்கள் அப்பு மண்டலத்திற்கு போய் அவ்விடத்திற் குடியிருப்பது அசாத்தியம் ஆனபடியாற்றான் சலப் பிரளயம் வந்த பொழுது மனுவென்பவர் அக்கினி மண்டலத்தையும் அப்பு மண்டலத்தையும் தாண்டிப் பிருதுவி மண்டலத்தை அடைந்தார்.

(தொடரும் ......

'சிவம்'

★ அதிக ஆற்றல் வாய்ந்த சிடானி இறைவன் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய் சாயிராம்

# சாயி போதனை

## இறைவன் படைப்பும் செயலும்

எல்லாம் வல்ல இறைவனின் படைப்புத்தான் இந்த உலகமும் அதில் காண்பனயாவும். இறைவன் படைப்பில் முக்கியமானவை இறைவனும் ஆன்மாக்களுமே. மனிதர் உட்பட சகல ஜீவராசிகளிலும் தெய்வத்துவம் உள்ளது. இந்த ஜீவராசிகள் முன்னைய பிறவிகளில் செய்த புண்ணிய பலத்தினால், மனித உடலைத்தாங்கி, வந்திருப்பவைதான் மனிதா என்ற உயர்ந்த பிறவி. மனித குலத்துக்குத்தான், மற்றைய ஜீவராசிகளுக்கில்லாத பகுத்தறிவு. அது தான் விவேகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பகுத்தறிவைக் கொண்டு மனிதர் உயர்நிலைக்கு செல்லவும் வழிகாட்டினார். உயர்நிலை அடைந்தவர்கள் தான் மகாத்மாக்கள், தெய்வத்துவம் வாய்ந்தவர்கள், ஞானியர், துறவிகள், முனிவர்கள் போன்றோர்.

இறைவன் உலகையும் அதில் உள்ளவற்றையும் படைத்து விட்டு வெறுமனே உட்கார்ந்திருக்கவில்லை. அவை சகலதுக்கும் வேண்டிய ஒழுங்கான எல்லா விதிமுறைகளையும் வகுத்து, அந்தந்த நியதிப்படி சரிவர நிர்வகித்தும், கண்காணித்தும் வருகிறார். மனிதனுக்கு பகுத்தறிவைக் கொடுத்தது எதற்காக? அவனிடம் சில பொறுப்புக்களை கொடுப்பதற்காக தான் சிருஷ்டிக்கவற்றைப் பாதுகாத்து பயன்படுத்தும்படியான அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். இதற்கான ஒரு நிபந்தனையும் விதித்திருக்கிறார்.

இறைவனின் நிபந்தனை. மனிதா நீ செய்யும் செயற்பாடுகள் (கர்மம்) அத்தனையும் நல்லவையோ அல்லது தீயவையோ அவற்றிற்குரிய பலன்கள் உன்னையே வந்தடையும் என்பதை மறந்து விடாதே. நீங்கள் நல்ல புனிதமான செயல்களைச் செய்தால் ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் அடையலாம். தீய செயல்களை, இழிந்தவற்றை பாவ காரியங்களைச் செய்தால் துன்பங்களை, வேதனைகளை, அனுபவிக்க வேண்டும். தீயவற்றைச் செய்து விட்டு ஆனந்தத்தை எதிர்பார்க்க முடியாது.

மகிழ்ச்சி நிறைந்த மனிதன் தியாகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனாகப் பிறந்து மனித சமுதாயத்தில் வாழ்ந்து வருபவரிடம் மனிதத்தன்மை மிளிராவிட்டால் அவர் விலங்கினைவிடத் தாழ்ந்தவராகிறார். ஒருவன் தன் மனதை ஒரு ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தால் தான் அவன் உண்மையான மனிதனாவான்.

மக்கள் மனதின் தன்மையும் அறிந்திருக்க வேண்டும். மனம் மிக வலுவானது. மிக வேகமானது. மனோவேகமென்பது ஆகாயத்தை விட உயரமானது. பிறப்பு, இறப்பு, இன்பதுன்பம், எல்லாவற்றுக்கும் காரணமானது மனதின் எண்ண அலைகளே. மனம் புலன்கள் வழி சென்றால் கனவில் கூட அமைதியையும் ஆனந்தத்தையும் பெற முடியாது. மனதை விவேகத்தின் துணை கொண்டு, இதய தெய்வத்தின் பார்வை ஒளி வீசினால் மலம் பாற்கடலாக மாறும். அந்த மனதில் சத்தியம், தர்மம், சாந்தி என்பன மிளிரும். இந்த மனிதனிடம் தெய்வம் பிரகாசிக்கும்.

எனவே கிடைக்கும் நேரத்தை வீணடிக்காது, தெய்வநாமம் சொல்வதையும் தெய்வ சிந்தனை செய்வதையும் கடமையாகக் கொண்டு வாழுங்கள்.

அதர்மம் சரிந்து தர்மம் தழைத்தோங்குக.

சாயிராம்.

கரணவாய் வடக்கு,
கரவெட்டி

க. தம்பையா
ஆசிரியர்

## ஞானதீபம்

விவேகமே வடிவெடுத்தது ஞானதீபம். பக்தியினின்று பெருக்கெடுக்கும் அமைதியே அதற்கு எண்ணெய். ஈசுவர தியானம் அது எரிவதற்கு ஏற்ற நல்ல காற்றாகிறது. இடையறாப் பிரம்மசரியத்தினின்று வரும் பேருணர்வு அத்தீபத்துக்குத் திரியாகிறது. பற்றற்ற உள்ளம் அந்த விளக்கை வைப்பதற்கேற்ற இடமாகிறது. அங்கு ஆசையென்னும் புயல் காற்றடியாதிருக்க வேண்டும். ஈசுவர சொரூபம் அத்தீபத்தில் எரியும் ஒளிப்பிழம்பாகிறது.

சுவாமி சித்பவானந்தர்

அழுபிற் சிறந்த புகழாளன் யோகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நிம்மதி?

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர், ஓர் அரசர் தன்னுடைய நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் ஒழுங்காகத்தான் செய்துகொண்டிருந்தார்.



இருந்தாலும் அவருக்கு மனநிம்மதி இல்லை.

எப்போது பார்த்தாலும் ஏதாவது பிரச்சனை.

அதனால் அரசருக்கு வாழ்க்கையில் அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டது. ''என்ன செய்யலாம்?'' என்று யோசித்தார்.

இதைப் பற்றி தமது நெருங்கிய நண்பர்களிடம் கலந்து பேசினார்.

அவர்கள் ''பக்கத்தில் இருக்கும் ஒரு காட்டில் பெரியவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் சென்றால் ஏதாவது வழி கிடைக்கும்'' என்று ஆலோசனை கூறினார்கள்.

அரசர் உடனே அங்கு புறப்பட்டுச் சென்றார். அந்தப் பெரியவரைப் பார்த்தார். அவரது காலில் விழுந்து வணங்கினார்.

★ மிகப் பெரிய தொழிற்சாலை மனம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சுவாமி அரசாங்கத்தை நிர்வகிப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது'' என்று தெரிவித்தார்.

''அப்படியானால் .. அதை விட்டுவிடேன்!'' என்றார் பெரியவர்.

''நான் விலகிவிட்டால் பிறகு அரச காரியங்களைக் கவனிப்பது யார்?'' என்று மன்னர் வினவினார்.

அதற்குப் பெரியவர் உன் பிள்ளையிடம் அந்தப் பொறுப்பை ஒப் படைத்துவிடு'' என்று கூறினார்.

''ஒப்படைத்துவிட்டு நான் என்ன செய்வது?'' என்று அரசர் கேட்டார்.

''காட்டுக்கு வந்து என் பக்கத்தில் உட்கார்ந்துகொள், நிம்மதி யாக இரு'' என்று பெரியவர் தெரிவித்தார்.

பிறகும் அந்த ராஜா ஏதோ யோசனை செய்துகொண்டிருந்தார்.

''என்ன யோசனை?'' என்று கேட்டார் இவர்.

''அது வந்து... ஒன்றுமில்லை... என் மகன் மிகவும் சிறிய பையன் என்னாலேயே தாங்க முடியாத அரச பாரத்தை அவன் எப்படித் தாங்கு வான்?' என்று யோசிக்கிறேன்'' என்றார் அரசர்.

''அப்படியானால் அதை என்னிடம் கொடுத்துவிடு'' என்றார் பெரியவர்.

அதற்கு அரசர் ''சரி'' என்று ஒப்புக்கொண்டார்.

''சத்தியம் செய்து கொடு'' என்று கேட்டார் பெரியவர்

அதற்கிணங்க அரசரும் ''இனிமேல் இந்த ராஜ்யம் முழுவதும் உங்களுடையது'' என்று பெரியவரிடம் சத்தியம் செய்து கொடுத்தார்.

''சரி ராஜ்யத்தை என்னிடம் கொடுத்துவிட்டாய். இனிமேல் நீ என்ன செய்யப்போகிறாய்?'' என்று பெரியவர் கேட்டார்.

''அரண்மனைக் கருவூலத்திலிருந்து கொஞ்சம் பொன் எடுத்துக் கொண்டு வெளிதேசம் எங்கேயாவது சென்று விடுகிறேன் அங்கே போய் ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்கிறேன். என்றார் இவர்.

''அரண்மனைக் கருவூலம் இப்போது எனக்குச் சொந்தம்! அதிலி ருந்து நீ எப்படி பொன்னோ பணமோ எடுக்க முடியும்?'' என்றார் இவர்.

அதற்கு அரசர், ''நீங்கள் சொல்வதும் சரிதான். அப்படியானால் நான் வேறு எங்கையாவது சென்று, ஏதாவது வேலை செய்து பிழைத் துக் கொள்கின்றேன்'' என்று தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி இப்போது வேலை செய்வது என்று நீ முடிவு செய்துவிட்டாய். அதை ஏன் நீ வேறு எங்கேயாவது போய்ச் செய்ய வேண்டும்? இங்கு என்னிடம் செய்யலாமே!'' என்றார் பெரியவர்.

''சரி அப்படியே செய்கிறேன். தாங்கள் எனக்கு ஏதாவது ஒரு வேலை கொடுங்கள்!'' என்று கேட்டார் ராஜா.

பெரியவர் வேலை கொடுத்தார், ராஜாவைப் பார்த்து சொன்னார்;

''இதோ பாரப்பா நீ ஏற்கனவே ராஜாவாக இருந்து பழக்கப்பட்டவன். ஆதலால் எனக்குப் பதிலாக நீ இந்த ராஜ்யத்தைக் கவனித்துக்கொள். உன்னுடைய வேலைக்கு உனக்குச் சம்பளம் தருகிறேன். கடமையைச் செய்யவேண்டியது உன் பொறுப்பு. அதில் உள்ள நல்லது கெட்டதுக்கு நான் பொறுப்பு. நீ உன் வேலையை செய்துவிட்டு, மாதா மாதம் என்னிடம் வந்து சம்பளம் வாங்கிக்கொள்'' என்றார் பெரியவர்.

அப்படியே செய்தார் அந்த ராஜா.

முன்பு என்ன செய்து கொண்டிருந்தாரோ..... அதையேதான் அவர் இப்பவும் செய்கிறார். ஆனால் இப்போது கவலை இல்லாமல் நிம்மதியாக இருந்தார். பிரச்சனைகள் பெரியதாகத் தெரியவில்லை. நிம்மதியாக அவரால் தூங்க முடிந்தது. 'என்னுடைய கடமையை நான் செய்கிறேன். இந்த அரசாங்கம் என்னுடையதில்லை!' என்ற நினைப்புத்தான் அவருடைய அந்த நிம்மதிக்குக் காரணம்.

ஒரு மாதம் கழிந்த பிறகு அந்தப் பெரியவரை ராஜா சந்தித்தார்.

''புது வேலை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார் பெரியவர்.

''மனநிறைவு தருகிறது. நிம்மதியாக இருக்கிறது'' என்றார் ராஜா.

''அரசாங்கம் உன்னுடையது என்று நினைத்தபோது அவதி. அது உன்னுடையதில்லை என்று தெரிந்ததும் நிம்மதி. பற்றில்லாமல் கடமையைச் செய்! பலனை எதிர்பார்க்காதே! இதுதான் நிம்மதிக்கு வழி. இதை நீ புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இப்படிச் செய்தேன்!'' என்றார் பெரியவர்.

நாமும் அதைப் புரிந்துகொண்டால், நல்லபடியாக நிம்மதியாக வாழலாம். புரிந்துகொள்ள வேண்டுமே!

ஒரு நீதிக்கதை

★ பெரிய குடிகாரன் பணக்கொருக்குள்ளவன். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவர்கள் பிறப்பு

வனத்திலே வசித்துவந்த குந்திதேவிக்கு தருமர் பிறந்திருந்த சமயம், அஸ்தினாபுரத்தில் திருதராஷ்டிரமன்னனின் மனைவி காந்தாரி கர்ப்பவதியாக இருந்தாள். அவளுக்கு குழந்தை இரண்டு ஆண்டுகளாயும் பிறக்கவில்லை. குந்தியின் புதல்வன் சிறந்த அறிவும் அழகும் உடைய பாலகனாகவிருப்பதைக் கேள்வியுற்று காந்தாரி மிகவும் மனவேதனையடைந்து தன்வயிற்றில் ஓங்கி அறைந்துகொண்டாள். இதனால் அவளது கர்ப்பம் கலைந்தது. இதனைக் கண்ணுற்ற காந்தாரி மிக்க மனவேதனையும் வெறுப்பும் அடைந்து வியாசமகரிஷியை நினைந்து வணங்கினாள். அவ்வேளை அங்கு பிரசன்னமாகிய வியாசமகரிஷி அவளுக்கு ஆறுதல் மொழிபகர்ந்தார். அத்துடன் கலைந்தகருவின் பகுதிகளிலிருந்து நூறு ஆண்மகவும் ஒரு பெண்மகவும் உண்டாகும் வண்ணம் அருள்புரிந்தார். இதன் வண்ணம் நூறு ஆண்குழந்தைகளையும் ஒரு பெண்குழந்தையையும் பெறும்பாக்கியம் காந்தாரிக்கு கிடைக்கலாயிற்று. முதலாவது புதல்வனாகிய துரியோதனன் உருவாகிய வேளையில் வெளியே பல துர்நிமித்தங்கள் ஏற்படலாயிற்று. குழந்தை அழுதபோது அதன்குரல் கழுதை கத்துவது போலிருந்தது. குழந்தையின் குரலுக்கு எதிர்க்குரல் கொடுப்பதுபோல் வெளியே நரிகள் ஊளையிட்டன. துர்நிமித்தங்கள் ஏற்பட்டதையும் குழந்தையாகிய துரியோதனன் கழுதையைப்போல கத்தியதையும் கண்ணுற்ற திருதராஷ்டிரமன்னன் பெரிதும் மனக்கவலையடைந்தான்.

மனச்சஞ்சலமடைந்த திருதராஷ்டிரன் பெரியோர்களாகிய பீஷ்மர் விதுரன் மற்றும் அந்தணப் பெரியோர்களையழைத்து யோசனை செய்யலானான். ''ஏன் எனக்குத் தலைமகன் பிறந்தவேளை துர்நிமித்தங்கள் ஏற்படலாயிற்று'' என்று அவர்களை நோக்கி வினாவினான். மன்னன் இவ்வாறு கேட்டதும் பெரியோர்கள் ''மன்னா உனக்குத்தலைமகன் பிறந்தவேளை அபசகுனங்கள் ஏற்பட்டமையால் உனது தலைமகனால் உனது குலமழியும். சிவந்த கண்களுடன் உனது புதல்வன் பிறந்திருப்பது மிகவும் தீமை பயப்பதாகும். இவனால் அரசகுலமழியப் போகின்றது எனவே நீ உன் புதல்வனைத் தியாகம் செய்துவிடல் வேண்டும். ஒரு குடும்பம் நலம்பெற ஒருவனைத் தியாகம் செய்தல் வேண்டும். ஒரு நாடு

★ உன்னிடம் உள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலம்பெற ஒரு கிராமத்தைத் தியாகம் செய்தல் வேண்டும். வீடுபேறடைய விரும்பினால் இந்த உலகையே துறக்க வேண்டும். எனவே உனது குலம் தழைக்க வேண்டுமாயின் நீ உன் ''மூத்த புதல்வனைத் துறந்துவிடுவது நலம் தருவதாக அமையும்'' என்று எடுத்துரைத்தனர் ஆனால் திருதராஷ்டிர மன்னன் புத்திர பாசத்தினின்றும் நீங்காதவனாய் பெரியோர்கள் சொல்லை செவிமடுத்தானேயன்றி செயற்படுத்தவில்லை. குழந்தைகள் அனைவரும் அஸ்தினாபுரத்து அரண்மனையில் சுகமாக வளர்ந்து வரலாயினர். இவர்களே கௌரவர்களென அழைக்கப்பட்டனர்.

## பாண்டுமன்னனின் மறைவு

வனத்திலே பஞ்சபாண்டவர்கள் மகிழ்வுடன் வளர்ந்து வரலாயினர். முனிவர்களினதும் ரிஷிகளினதும் அன்புக்குப் பாத்திரமாயினர். அவர்களின் பண்புகளையும் நல்ல பழக்கங்களையும் கற்றுவந்தனர். முனி பத்தினிகள் இளம் பஞ்சபாண்டவர்களைத் தம் புதல்வர்கள் போல் போற்றிப் பாதுகாத்து வந்தனர். வனத்திலே வாழும் பாண்டுமன்னனுக்குப் புதல்வர்கள் பிறந்திருப்பதையறிந்த யாதவகுல மன்னன் வசுதேவர் பெருமகிழ்வு கொண்டார். பஞ்சபாண்டவர்களுக்கு ஜாதகர்மம் முதலான கர்மங்களைச் செய்ய வேண்டும் என்று விரும்பி தனது புரோகிதரை வனத்துக்கு அனுப்பி வைத்தார். அத்துடன் பொன்பசு முதலானவற்றையும் வேண்டிய திரவியங்களையும் பாண்டுமன்னனுக்கு அனுப்பிவைத்தான். புரோகிதர் பஞ்சபாண்டவர்களுக்கு உபநயனம் செய்துவைத்து வேத அத்தியாயனமும் செய்யத்தொடக்கி வைத்தார்.

வில்வித்தையிற் சிறந்தவனான ''சுக்கிரன்'' என்பவன் சதசிருங்க மலையில் தவவாழ்க்கை மேற்கொண்டிருந்தான். அவனிடம் பஞ்சபாண்டவர்கள் அஸ்திரப்பயிற்சிகளைக் கற்றனர். தருமர் ஈட்டிச்சண்டையில் வல்லவரானார். வீமன் கதாயுதப்பயிற்சியில் மேம்பட்டு விளங்கினான், விஜயன் விற்போரில் சிறந்தவனானான் நகுலசகாதேவர் கத்திச்சண்டையில் வல்லவர்களாயினர். விஜயனின் வில்லாற்றலை அவனது குருவாகிய சுக்கிரனே வியந்து பாராட்டி கத்தி, வில், வாள் போன்றவற்றை அவனுக்குப் பரிசளித்தான்.

இக்காலத்தில் அர்ச்சுனனின் பதினான்காவது பிறந்ததினம் வந்தது. இதன்பொருட்டு குந்திதேவி பிராமணோத்தமர்களை அழைத்து விருந்திட்டு அர்ச்சுனனை வாழ்த்துவதற்கு ஏற்பாடு செய்வதில் முனைந்திருந்தாள். அக்காலம் வசந்தகாலமாகையால் எங்கும் மனோரம்மியமான காட்சிகளால் பொலிவுற்றிருந்தது. பாண்டுமன்னன் மனங்கவரும் காட்சிகளால் மகிழ்வுற்றிருந்தான். அவ்வேளை மாத்திரிதேவியும் உடனிருந்த

பெரியவர்களுக்குத் தொண்டு செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் இருவரினதும் தனிமைவேளை பாண்டு மன்னனின் மனதைப் பெரிதும் தவிப்புறச்செய்தது. கிந்தமமுனிவரின் சாபத்தை நினைந்து தனது மனதை தன்வசம் வைக்க விழைந்தான். ஆனால் விதி விளைத்த வழியே அவன் மனம் செல்லலாயிற்று. அவன் மாத்ரியுடன் இன்பமாக இருந்த வேளை சாபத்தின் வலிமையால் தன்னுயிர் நீத்தான். இதனைக் கண்ணுற்ற மாத்ரிதேவி மிகக் கவலைகொண்டு பெருங்குரலெடுத்து அலறலானாள். மாத்ரிதேவியின் அலறலைச் செவியுற்ற பஞ்சபாண்டவர்களும் குந்திதேவியும் அவ்விடத்துக்கு விரைந்தேகினர். பாண்டுமன்னன் இறந்திருப்பதைக் கண்ணுற்ற குந்திதேவி மூர்ச்சையுற்றாள்.

[தொடரும்......

வாரியார்வாரிசு
சிவத்திரு. வ. குமாரசாமிஐயர்
நூலகர்,
வலிவடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.
(மல்லாகம்)

## ஆலயங்கள்

வாழ்க்கையில் பலவிதமான அனுபவங்களை எதிர்கொள்ளுகின்றோம். ஆனாலும் சமயத்தின் மேன்மைக்கின்ற அன்பு எல்லோருக்கும் மிக அவசியம். ஏனென்றால் எல்லாச் சமயங்களும் நல்லவற்றைத்தான் சொல்கின்றன. நல்லவற்றைத்தான் செய்கின்றன. அதேபோல ஆலயங்கள் எமது மனதை ஒருநிலைப்படுத்தி எமது வாழ்க்கையை வளப்படுத்துகின்றன.

யாழ் மருத்துவபீடாதிபதி
வைத்திய கலாநிதி இராஜேந்திரபிரசாத்
திருவாசக விழாவில் ஆற்றிய உரையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக விழா

**27 - 12 - 1998** ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் வருடாவருடம் நடாத்தப்படும் திருவாசகவிழா பக்தி பூர்வமாக நடைபெற்றது. நல்லை ஆதீனகுருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலைப்பீடாதிபதி கலாநிதி சண்முகதாஸ் அவர்களும், மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி இராஜேந்திரபிரசாத் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தெய்வவாசக வழிபாடு :

வழமைபோல ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் விசேட அபிஷேகத்துடன் திருவாசகவிழா நிகழ்வு ஆரம்பமாகியது. ஒவ்வொரு மாதமும் வருகின்ற பூரணை தினத்தில் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்து கூடுகின்ற பல சமயப் பெரியோர்களால் ஆச்சிரமத்தில் தவறாது திருவாசக முற்றோதல் நடைபெறுவது வழக்கம். அவ்வாறு திருவாசக முற்றோதலுக்கு பயன்படுத்தப்படும் தெய்வ வாசகமான திருவாசக நூல்கள் ஆலயத்தில் பூசைக்காக வைக்கப்பட்டு அவையும் பூசிக்கப்பட்டன. பூசை முடிவடைந்தபின் மேளவாத்தியத்துடன் அந்த திருவாசக நூல்கள் ஊர்வலமாக ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்பட்டன.

## தலைமையுரை :

நல்லை ஆதீன முதல்வர் அவர்கள் தலைமையில் ஆச்சிரமத்தில் திருவாசக விழா ஆரம்பமாகியது. சுவாமிகள் தமது தலைமையுரையில் திருவெம்பாவை நடைபெறுகின்ற இக்காலப்பகுதியில் சைவர்களாகிய நாங்கள் திருவாசகத்தை மட்டுமே ஓதவேண்டும் என்றும் ஏனைய எமது சமய நூல்களைக் காப்புக்கட்டி அவற்றை மூடி வைப்பது வழக்கம் என்றும் குறிப்பிட்டார். அந்த வகையில்தான் இன்று எமது விழாக்கூட தேவாரத்திற்குப் பதிலாக திருவாசகம் ஓதப்பட்டு ஆரம்பமாகியது எனவும் குறிப்பிட்டார்கள்.

## சிறப்புரை :

யாழ்பல்கலைக்கழக இடைவருகை விரிவுரையாளர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் இவ்விழாவில் சிறப்புரை நிகழ்த்தினார்கள். எமது சிந்தனையைத் தூண்டக் கூடிய வகையில் வித்தியாச

★ இறைவன் கையில் நீ ஒரு கருவி என்று நினை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை கோணத்தில் கருத்துக்களைக் கூறுகின்ற திருமதி சண்முகதாஸ் அவர்கள் பல ஆழமான கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பற்றியும் கருத்துக்களை வெளியிட்ட அவர் இறைவனை எமக்கு மிகவும் நெருக்கமான இடத்தில் வைத்து வழிபட்டு அவரை எமக்கு மிகவும் நெருக்கமானவராக நாம் ஏற்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

**வாழ்த்துரை :**

வாழ்த்துரையை யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி சண்முகதாஸ் அவர்களும், மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி இராஜேந்திரபிரசாத் அவர்களும் வழங்கினார்கள்.

எமது வாழ்க்கை உண்மையானதாகவும், பயன் உடையதுமாக அமைவதற்கு எமக்கு உதவியாக இருப்பவை சமயம் தான் என இராஜேந்திரபிரசாத் அவர்கள் தமது உரையில் விவரித்துக் கூறினார். அதே போல எமது மனதை ஒரு நிலைப்படுத்தி, எமது வாழ்க்கையை வளப்படுத்துவதற்கும் ஆலயங்கள் தான் துணை செய்கின்றன எனவும் குறிப்பிட்டார்.

**பண்ணிசை :**

வாழ்த்துக்களைத் தொடர்ந்து திருவாசகவிழாவினை முன்னிட்டு பேரவையால் நடாத்தப்பட்ட திருவாசகப் பண்ணிசைப் போட்டியின் நான்கு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களிலும் வெற்றிபெற்ற பிள்ளைகளினது பண்ணிசை ஓதும் நிகழ்வு இடம்பெற்றது.

**பரிசில் வழங்கல் :**

வெற்றியீட்டிய பிள்ளைகளின் பண்ணிசை ஓதும் நிகழ்வைத் தொடர்ந்து போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் நிகழ்வு நடைபெற்றது. பரிசில்களை நல்லை ஆதீனகுருமுதல்வர் அவர்களும் கலாநிதிகள் திரு. திருமதி சண்முகதாஸ் அவர்களும், வைத்திய பீடாதிபதி இராஜேந்திரபிரசாத் அவர்களும் திருமதி இராஜேந்திரபிரசாத் அவர்களும் வழங்கினார்கள்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ், பரிசு, பணம் ஆகிய மூன்றும் வழங்கப்பட்டன. அத்துடன் போட்டியில் பங்கு பற்றிய அனைவருக்கும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டன.

**சிறப்பு இசை நிகழ்வு :**

திருவாசகவிழாவின் இறுதி நிகழ்ச்சியாக இசைமணி வ. செல்வத்துரை ( இசைப்பேராசிரியர் யாழ் நுண்கலைக்கழகம் ) அவர்களின் இசைக் கச்சேரி நடைபெற்றது. குறுகிய நேரம் நடைபெற்றாலும் சபையோரின் ஆவலைத் தூண்டும் விதத்தில் திரு. செல்லத்துரை அவர்களின் இசைக் கச்சேரி அமைந்திருந்தது.

★ எப்பொழுதும் உன் பணிகளை இறைவனுக்கே அர்ப்பணித்துவிடு ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக விழாப் போட்டி

## ★ முடிவுகள் ★

### ஆண்டு 6 - 7

1 ஆம் இடம் க. கபிலன்
( ஏழாலை மகா வித்தியாலயம் )

2 ஆம் இடம் சி. பிரபாலினி
( வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்,
தொண்டைமானாறு )

3 ஆம் இடம் க. அருள்க்குமரன்
( ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை )

### ஆண்டு 8 - 9

1 ஆம் இடம் செ. ஜீவிதா
(கலட்டி மெதடிஸ்மிஷன் த. க பாடசாலை
யாழ் )

2 ஆம் இடம் கு. பாலகிருஷ்ணகுமாரன்
( வல்லை சிவகுரு வித்தியாலயம்
வல்வெட்டித்துறை )

3 ஆம் இடம் ம. அனுஷியா
(செந்திரோசா மகளிர் கல்லூரி அச்சுவேலி)

### ஆண்டு 10 - 11

1 ஆம் இடம் க. எழிலரசி
( மெதடிஸ்த பெண்கள் கல்லூரி
பருத்தித்துறை )

★ நீ தான் உன் தலை விதியைத் நிர்மாணிக்க வேண்டும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 ஆம் இடம் லோ. யாழினி
(மெதடிஸ்த பெண்கள் கல்லூரி பருத்தித்துறை)

3 ஆம் இடம் மா. தாருகாசினி
(விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி)

த. நந்தகேசன்
(உடுப்பிட்டி அ. மி கல்லூரி)

ஆண்டு 12 - 13

1 ஆம் இடம் வே. ஞானசம்பந்தன்
(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

2 ஆம் இடம் ச. ஸ்ரீரஞ்சினி
(யூனியன் கல்லூரி)

3 ஆம் இடம் சி. கார்த்திகா
(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

## பணிவுள்ள சீடனும் மதியில்லாத குருவும்

ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது. குரு தம் சீடனை அழைத்தார். அக்கரையில் இருக்கும் தன் ஆடையை எடுத்து வருமாறு பணித்தார். ஒரு நொடிப் பொழுதில் ஆற்றைக் கடந்து குருவின் ஆடையை எடுத்து வந்தான் சீடன்.

''இத்தனை வெள்ளத்தில் மூழ்கி விடாமல் நீ எப்படி ஆடையை எடுத்து வந்தாய்?'' என்று குரு ஆச்சரியத்துடன் கேட்டார்.

''சுவாமி தங்களின் திவ்விய பாதுகைகளே துணை'' என்று வணங்கியவாறே போய் வந்தேன்' என்று பகர்ந்தான் சீடன்.

அது கேட்ட குரு, ''என் பாதுகைகளுக்கு அவ்வளவு மகிமையா?'' என்று மகிழ்ந்து, தம் இரு பாதுகைகளையும் தலை மீது வைத்துக் கொண்டு, ''என் திவ்விய பாதுகைகளே எனக்குத் துணை'' என்று பலமாய்க் கத்திக் கொண்டே அவசரமாக ஆற்று வெள்ளத்தில் இறங்கினார்.


அந்தோ! மறுகணமே வெள்ளம் அவரை அடித்துக் கொண்டு போய்க் கடலரசனிடம் ஒப்படைத்து விட்டது!

ஒரு செயலின் விளைவை நீதான் பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் காட்டும் தத்துவக் கருத்துக்கள்



திருமந்திரம் சிவனையே முழுமுதற் தெய்வமாகக் காட்டுகிறது. சிவனுக்கு ஒப்பான தெய்வம் வேறு எதுவும் இல்லையென்பதே தவயோகியின் கருத்தாகும். சகல புவனங்களையும் அண்டங்களையும் கடந்து ஒளிமயமாக சதா பிரகாசித்துக் கொண்டிருப்பது சிவ வடிவமே ஆகும். புனிதமானவர்களுடைய இதயத்தாமரையிலே வீற்றிருந்து அருள்புரியும் வடிவம் இதுவே ஆகும் என்பதனை பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

"சிவனோடொக்குந் தெய்வந் தேடினும் இல்லை
அவனோ டொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடை முடித் தாமரையானே"

வேதத்தின் அந்தத்தில் இருக்கின்ற உபநிடதங்கள் வேதாந்த தத்துவத்திற்கு மூலமாக இருப்பது போல சிவாகமங்களின் அந்தத்தில் இருக்கின்ற ஞான பாதம் சைவசித்தாந்த தத்துவத்திற்கு மூலமாகக் காணப்படுகிறது. சிவாகமக் கருத்துக்களை தெளிவு படுத்தி எழுந்த நூலாகிய திருமந்திரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் செறிந்து காணப்படுகின்றன. சைவ சித்தாந்தம் என்ற சொற்றொடரே முதன் முதலில் திருமந்திரத்திலேயே கையாளப்படுகிறது. "தற்பரங் கண்டுளோர் சைவ சித்தாந்தரே" எனத் திருமந்திரம் இதனைக் குறிப்பிடுகிறது. சைவசித்தாந்த தத்துவம் பதி, பசு, பாசம் ஆகிய மூன்று பொருட்களையும் உள் பொருள் எனக் கூறுகிறது. பதி என்பது இறைவனையும், பசு என்பது ஆன்மாக்களையும், பாசம் என்பது ஆன்மாக்களைக் கட்டி நிற்கும் தளையையும் குறிப்பிடுகிறது. பதியாகிய இறைவன் கருணையோடு ஆன்மாக்களை அணுகும் போது ஆன்மாக்களைப் பிணித்துள்ள தளை தானாகவே நீங்கிவிடும். ஆன்மாக்களும் மயங்கி நிற்காமல் மயக்கம் நீங்கி இறைவனை உணரும் என்பதனைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

★ பக்தி என்பது இறைவனிடம் செலுத்தும் மேலான அன்பாகும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
பதியணுகில் பசு பாசம் நில்லாவே

திருமந்திரம் தத்துவ நூலாகவும், யோக நூலாகவும், வைத்திய நூலாகவும் திகழ்வதோடு மாத்திரமல்லாது பஞ்ச பூதங்களின் நுட்பங்களை விளக்கும் சிறந்த அறிவியல் நூலாகவும் திகழ்கிறது. இரசாயனம், பௌதிகம், வானசாஸ்திரம் ஆகிய எல்லாத் துறைகளையும் திருமந்திரம் விளக்குகிறது. திருமூலர் சாதாரண மனித அறிவின் எல்லைக்குள்ளும் அதற்கு அப்பாலும் விரிந்து பரந்து நிற்கின்ற தத்துவங்களையெல்லாம் மெய்யுணர்வினால் கண்டு பேசுகின்ற மகா ஞானியாகத் திகழ்ந்தார். தெரிந்ததில் இருந்து தெரியாததை விளக்க வேண்டும் என்ற உளவியல் தத்துவத்திற்கு அமைய அறிவுக்கு அப்பாற்பட்ட விடயங்களை விளக்குவதற்கு அறிவுக்குப் புலனாகின்ற உண்மைகளை உதாரணம் காட்டுவார்.

சூரிய காந்தக் கல்லுப் போல இருக்கின்ற குவிவு வில்லை சூரியனுடைய கதிர்களை இழுத்து வைத்திருக்கக் கூடிய சக்தி வாய்ந்ததாகும். சூரிய காந்தக் கல்லின் கீழ் பஞ்சை வைத்துச் சூரியனுடைய கதிரை அந்தக் கண்ணாடியின் ஊடாகச் செலுத்தினால் பஞ்சு தீப்பற்றிக் கொள்ளும். இவ்வாறு ஆன்மாவில் இறைவனின் திருவருள் சக்தி படிந்தால் ஆன்மாவைப் பீடித்திருக்கும் மும்மல அழுக்கு நீங்கிவிடும். ஆன்மாவின் பக்குவ நிலைக்கு ஏற்ப இறைவனே குருவாக வந்து ஞானத்தை வழங்குகிறான் என்பதே சைவ சித்தாந்திகளின் கொள்கை ஆகும். குருவைச் சூரியனுக்கும், குருவருளைச் சூரியனுடைய கதிருக்கும், ஆன்மாவைச் சூரிய காந்தக் கல்லுக்கும், மும்மல அழுக்கைப் பஞ்சுக்கும் உவமை காட்டி விளக்கும் பாடலாக பின்வரும் திருமந்திரப் பாடல் காணப்படுகிறது.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியிற் சுடுமாறு போல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே

உடம்பை உறுதியாக வைத்திருப்பதற்கான பயிற்சிகளில் யோகப் பயிற்சியும் ஒன்றாகும். யோக புருஷராகிய திருமூலர் தாம் யோகப் பயிற்சியினால் அடைந்த பயன்களை தமிழ் மந்திரமாகத் திருமந்திரத்திலே தந்துள்ளார். அழிந்து போகின்ற உடம்பை உயிர் இருக்கும் வரை ஆரோக்கியத்தோடும் உறுதியோடும் இயங்கும்படி பாதுகாக்கிற பயிற்சிக்கு காயசித்தி உபாயம் என்று பெயர் வழங்கப்படுகிறது. அண்டசராசரமெல்லாம் வியாபித்திருக்கின்ற பரம்பொருளாகிய இறைவனை இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிண்டமாகிய உடம்பின் உள்ளே காணலாம் எனத் திருமந்திரம் கூறுகிறது. கோயிலைப் பரிசுத்தமாகவும் புனிதமாகவும் பாதுகாப்பதுபோல இந்த உடம்பையும் பாதுகாக்க வேண்டும் என்பதை பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.

உடம்பு என்பது ஓர் ஆலயம். உள்ளம் என்பது ஆலயத்திலுள்ள கர்ப்பக்கிருகம். அந்தக் கர்ப்பக்கிருகத்துள் இறைவன் வந்து வீற்றிருக்கிறான். பஞ்சேந்திரியங்கள் இந்த உடம்பாகிய கோயிலுக்கு ஏற்றிய ஐந்து விளக்குகள் ஆகும். ஞானம் பெற்றவனுக்கு ஐந்து புலன்களும் அணையாத விளக்குகள் ஆகும். ஞானம் பெறாதவர்களுக்கு அவை கள்ளப் புலன்களாகும். ஞானம் பெற்றவர்களுக்கு அவையே சிவலிங்கத்தைக் காட்டும் அணையாத விளக்குகளாகும். சரீரத்தைக் கோயிலாக்கி அதற்குள்ளே பூஜைக்குரிய ஸ்தானங்களும் கூறப்பட்டுள்ளன. குருமுகமாகத் தெரிந்து கொண்டு செய்ய வேண்டிய ஆத்மார்த்த பூஜையின் ரகசியத்தை பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

குருவருளின்றித் திருவருள் இல்லை என்றே சைவசித்தாந்தம் கூறுகிறது. ஆத்ம ஞானம் தானாக விளங்காது. அதை விளங்க வைக்க குருவின் துணைதேவை. அறியாமை என்ற இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கிற துலக்கு மாற்றல் வாய்ந்த கருவியால் திறக்க வல்ல திறமையாளன் எவனோ அவனே குருவென உபநிடதங்கள் கூறுகின்றன. சச்சிதானந்தப் பொருள் ஒருவனுடைய குரு என்னும் மேனியின் மூலமாக இயங்கி மந்திரோபதேசம் செய்கிறது. ஆதலால் தன் குருவையே சச்சிதானந்தமாகக் கருதுபவன் தான் முன்னேற்றம் அடைகிறான். சூரியனின் ஒளி இல்லாமல் சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்ற முடியாதது போல அருள் வடிவமாகிய குருவின் துணை இல்லாமல் ஆன்மாக்களுக்கு உண்மை ஞானம் தோன்றாது என்பதை

ஞானமிவையொழிய நண்ணிவிடும் நற்கலனல்
பானுவொழியப் படின்

என்று திருவருட்பயன் விளக்குகிறது. மூவகை ஆன்மாக்களில் சகலருக்கு இறைவன் குருவடிவாக வந்து ஆட்கொள்வான் என்றே சைவ சித்தாந்தம் கூறுகிறது. குருவின் உருவத்தில் வந்து நமக்குத் திருவருள்

ஞான குருவைப் போல் நண்பர் பிறர் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகின்ற இறைவனின் திருமேனியைத் தரிசிப்பதே ஞானத்துக்கு வேண்டிய ஆரம்பப்பயிற்சியாகும். குருவின் திருநாமத்தைச் செப்புவது, குருவின் திருவாய் மொழிகளைச் செவியில் கேட்பது அவருடைய திரு உருவத்தைச் சதாதியானிப்பது ஆகிய எல்லாம் மெய்ஞ்ஞானம் பெறுவதற்குரிய வழிகளாகும். என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.

பிறப்பிலே கலந்து உயிரை ஆட்டிவருகிற கர்ம பலனை சைவசித்தாந்தம் சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என மூன்றாக வகுத்துக் கூறும். முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயன்கள் சேர்ந்து தங்கியுள்ள குவியல் சஞ்சிதம் என்றும், இக்குவியலில் இருந்து இப்பிறவியில் அனுபவிப்பதற்கு என்று முளைத்து நிற்கும் பகுதி பிராரப்தம் என்றும், நிகழ்காலத்திலே செய்கின்ற வினையை ஆகாமியம் என்றும் அழைப்பர். இறைவனுடைய திருவருளை நாடிப்பெற்று ஆன்ம ஞானத்தை தேடிக் கொண்டால் சஞ்சிதவினை, ஆகாமியவினை ஆகிய இரண்டும் நீங்கிவிடும். இறைவன் அருளை நாடினால் ஆன்மஞானம் கிடைத்து விடும். மேற்கூறிய உண்மைகளை பின்வரும் திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது.

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்து சிவனருளாலே.

திருமந்திரம் ஒழுக்கத்தை உபதேசிப்பதோடு ஆன்ம நாட்டத்துக்கும் ஞானத்தோடு இணைந்த பக்தி வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற்சியைத் தரும் நூலாக அமைந்துள்ளது. திருமூலர் இறையருளால் தாமே அனுபவித்து உணர்ந்த விசயங்களை நூலின் பொருளாக அமைத்துள்ளார். எனவே திருமந்திரத்தை "அனுபவ ஞானத்திருநூல்" எனப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

திருமந்திரத்தில் சூனிய சம்பாஷணை என்ற பகுதியில் மறை ஞானக் கருத்துக்கள் பல காணப்படுகின்றன. குழூஉக்குறிச் சொற்களைப் பயன்படுத்தும் முறையை சித்தர்களே அறிமுகம் செய்தார்கள். சாதாரண நிலையில் உள்ளவர்களுக்கு எளிமையாகத் தோற்றம் அளிக்கும் சொற்களால் ஆழ்ந்த பொருளைப் பொதிந்து வைத்துப் பாடுபவர்களே சித்தர்கள் ஆவார்கள் இதனை ஏமாற்றும் எளிமை எனக்குறிக்கலாம். திருமந்திரத்திலும் இப்படியான சொற்களைப் பயன்படுத்திப் பாடப்பெற்ற பாடல்கள் பல உண்டு. அஞ்ஞான இருள் படர்ந்த இந்த உடம்பின் ஒரு மூலையில் திருவருளே ஆகிய ஞானி இருக்கிறான் மலங்களால் பீடிக

சினம் போல் பகைவர் இவ்வுலகில் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட ஆன்மாவுடன் கூடுவதற்கு திருவருள் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி காத்துக்கொண்டு இருக்கிறது. மலங்களை நீக்கி திருவருள் சத்தியை ஆன்மாவில் படியச் செய்து ஆன்மாவைத் திருவருள் தன் வசப்படுத்துகிறது என்ற உண்மையை பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

இருட்டறை மூலையில் இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
மருட்டி அவனை மணம் புரிந்தாளே.

சிற்பி ஒருவனின் கைத்திறனினால் செய்யப்பட்ட யானையின் உருவம் மரத்தை மறைத்து யானையைக் காட்டுகிறது. மரம்தான் என நினைப்பவனுக்கு யானையின் உருவம் தெரியாது. யானையைக் காண்பவனுக்கு மரம் தெரியாது இவ்வாறு இறைவனின் வியாபகத்தை அனைத்துப் பொருள்களிலும் கண்டவர்களுக்கு பஞ்சபூதங்கள் நிலையில்லாத பொருள் என்பது தெளிவாகத் தெரியும். ஆனால் பிரபஞ்ச மயக்கத்தில் இருப்பவர்களுக்கு இறைவனின் சர்வ வியாபகம் விளங்காது.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே

எனத் திருமந்திரம் விளக்குகிறது.

வினைப் போகம் நம்மை அழுத்தும் வரை இறை சிந்தனை நமக்கு ஏற்படாது. இறைவனுடைய திருவருள் இல்லாமல் அவனை நாம் வணங்கவும் முடியாது என்பதை "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என மணிவாசகப் பெருந்தகையாகிய திருவாசகம் குறிப்பிடுகிறது. நம்மைப் பிடித்திருக்கின்ற வினையின் தாக்கம் குறைய வேண்டுமானால் சிவனுடைய நாமத்தை நாம் நாள்தோறும் உச்சரிக்க வேண்டும். சிவ நாமத்தை தொடர்ந்து கூறினால் நமது தீவினைகள் முற்றாக நீங்கி விடுவதுடன் சிவகதியும் நமக்கு கிடைத்துவிடும். சிவ வணக்கம் தரித்திரம், துக்கம் ஆகியவற்றை நீக்குவதோடு சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை நமக்குத் தரும். சிவஞான முத்தியும், பரகதியும் கிடைப்பதற்கு வழிசெய்யும் மூவாயிரம் பாடல்களுக்கும் முடியாக இருப்பது போல அமைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருமந்திரப் பாடல் மானிடர்களாகிய நாம் அனைவரும் சிவகதி அடைவதற்கு வழிகாட்டும் மந்திரப் பாடலாகவே காணப்படுகிறது.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினைமாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதிதானே.

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

## பழங்கள் அவர்களுக்கே

மயில்வாகன சுவாமிகளின் குருவாக விளங்கியவர் திருவண்ணாமலை ரமண மகரிஷி அவர்கள். அவரை வணங்கி அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறச் செல்லும் பக்தர்கள் பழங்கள் முதலியவற்றை எடுத்துச் சென்று அவற்றை அவர் முன்னிலையில் வைத்து வணங்கும் வழக்கம் உண்டு. ரமண மகரிஷியின் ஆச்சிரமச் சூழலில் பசுக்களும், குரங்குகளும் அதிகமாக வாழ்கின்றன. சிலவேளைகளில் ரமண மகரிஷியின் ஆச்சிரமத்திற்கு பக்தர்களால் கொண்டு வரப்பட்ட பழங்களை இந்தக் குரங்குகளும், பசுக்களும் தமக்கு உணவாக எடுத்து விடுவதும் உண்டு. அப்பொழுது அங்குள்ளவர்கள் அவற்றை அங்கிருந்து வெருட்டி பழங்களைக் காப்பாற்ற முயற்சிப்பது வழக்கம். இதை அவதானித்த மகரிஷி அவர்கள் அவ்வாறு மிருகங்களை வெருட்ட முயற்சித்தவர்களைப் பார்த்து மனிதர்களுக்கு கைகள் உண்டு. அவர்கள் இவற்றை பலவழிகளில் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இந்த விலங்குகளுக்கு மனிதர்களைப் போல கைகளோ அல்லது வேறு வசதிகளோ இல்லை. ஆகவே அந்தப் பழங்கள் அவைகளுக்கே உரியன. என்று கூறி அந்தப் பழங்களை குரங்குகளையும் பசுக்களையும் உண்ணுவதற்கு அனுமதியுங்கள் என்றார்.

மயில்வாகன சுவாமிகளின் குருபூசை தினத்தில்
திருமதி மங்கயற்கரசி சிற்றம்பலம்
ஆற்றிய உரையிலிருந்து.

தன்னடக்கம் தலை சிறந்த குணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

ஞான பண்டித கலாவித்தகி
கலாநிதி செல்வி

## தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

## 74 ஆவது நிறைவின் போது

சந்நிதியான் • ஆச்சிரம,
சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை
மனநிறைவாக வாழ்த்துகிறது.

பல்லவி

வாழ்த்துகின்றோம்கலா வித்தகியை - நீடு
வாழிய செல்வி தங்கம்மா தங்களையே
(வாழ்த்துகின்றோம்)

அநுபல்லவி

துர்க்கா துரந்தரியாய், துர்க்கா உபாசகராய்
அர்ப்பண சேவையினை அனவரதம் ஆற்றிடுவோய்
(வாழ்த்துகின்றோம்)

சரணம்

சிவநெறித் தொண்டுடனே சமூகப் பணியிணைத்து
செந்தமிழ்ச் சேவைசெய் திரிகரண சுத்தியளாய்
குவலயம் முழுவதும் நின் கொள்கைநலம் போற்றிசெய
நவநவ சிந்தனைகள் ஞாலத்துக் குவந்து நிற்போய்
(வாழ்த்துகின்றோம்)

அம்மாநின் கரநலத்து கலவாத பொற்கிழியோ
அல்லது சிந்தா மணியோவென் றதிசயிக்க
அம்பிகை துர்க்கா அருளாலே வழங்கிநிற்போய்
ஆயிரம் பிறைகாண அகவையின்றி வாழியவே
(வாழ்த்துகின்றோம்)

பேரவையினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

சந்நிதி முருகனின் அருள்கடாட்சத்தைப் பெற்று நடமாடும் தெய்வமாக விளங்கியவர் முருகேசு சுவாமிகள். அவர் பல அன்பர்களை இறைநம்பிக்கை உள்ளவர்களாகவும், முருக பக்தர்களாகவும் ஆற்றுப்படுத்தி அவர்களது வாழ்க்கை சிறப்படைய வழிகாட்டியாக திகழ்ந்தார். இந்த வகையில் சுவாமிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி அவருடைய அன்பையும் ஆசிர்வாதத்தையும் பெற்றவர்களே திருமதி தர்மலிங்கம் பவானியும் அவரது குடும்பமுமாகும். இவர்களின் சொந்த இடம் உரும்பிராய். உரும்பிராயில் கற்பகப்பிள்ளையார் கோவிலின் பின் வீதியில் அவர்களது வீடு அமைந்துள்ளது.

1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பவானி அவர்களின் கணவர் திரு. தர்மலிங்கம் அவர்கள் புளியங்குளம் அரசாங்க வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இதனால் திருமதி பவானி குடும்பம் அப்பொழுது புளியங்குளத்திலே குடியி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தனர். அந்தக் காலகட்டத்தில் தான் முருகேசு சுவாமிகளின் தொடர்பு இந்தக் குடும்பத்திற்கு முதன் முதல் ஏற்பட்டது. மேலும் அவர்கள் குடியிருந்த அந்த வீட்டிலேதான் திருமதி பவானி அவர்களின் நெஞ்சை உறைந்து போகும் அந்த அற்புத நிகழ்வு நடைபெற்றது.

1980ஆம் ஆண்டு புளியங்குளத்தில் திருமதி பவானி குடும்பம் தங்கியிருந்த வீடு பவானி அவர்களின் மாமன் முறை உறவினரான திரு. பேரம்பலம் அவர்களின் வீடாகும். அங்கே பவானி குடும்பத்துடன் அப்பகுதி குடும்பநல மருத்துவ மாதாகக் கடமையாற்றும் ஆனைம் என்று அழைக்கப்படும், மருத்துவப் பெண்ணும் அங்கே குடியிருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் பவானி அவர்களின் குடியிருந்த வீட்டிற்கு அண்மையில் உள்ள ஒரு வீட்டிற்கு முருகேசு சுவாமிகள் வந்து செல்கின்ற வழக்கம் இருந்தது. அப்பொழுது பலர் முருகேசு சுவாமிகளிடம் சென்று அவருடைய அருளையும் ஆசிர்வாதத்தையும் பெற்றுச் சென்றனர். சுவாமிகளின் சிறப்பை அறிந்து கொண்ட பவானி அவர்களும் சுவாமிகளிடம் சென்று எல்லோரையும் போலத் தானும் ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார். இது நடைபெற்றுச் சில நாட்களின் பின் யாரும் எதிர்பாராத வகையில் முருகேசு சுவாமிகளோ திருமதி பவானி அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். இவ்வாறு சுவாமிகள் தமது வீட்டிற்கு வருவார் என்பதை சிறிதும் எதிர்பாராத பவானி அவர்கள் உடம்பு மெய்சிலிர்க்க ஆனந்தப்பரவசம் அடைந்து சுவாமிகளை வரவேற்று உபசரித்தார்கள். அது மட்டுமல்ல பவானி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சுவாமிகளும் சில நாட்கள் அவர் வீட்டில் தங்குவதற்கும் சம்மதம் தெரிவித்து அங்கேயே தங்கியிருந்தார்கள்.

1980ஆம் ஆண்டு தைப்பொங்கலுக்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. நேரம் மாலை 7 - 30 மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. திருமதி பவானி அவர்களும் தனது அன்றாட வேலைகளை முடித்து ஓய்வாக இருந்த நேரம் இதனால் முருகேசு சுவாமிகளும் திருமதி பவானி அவர்களும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகத் தமக்கிடையே உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு சந்தர்ப்பத்தில் திருமதி பவானி அவர்கள் சுவாமிகளைப் பார்த்து

> நீங்கள் இவ்வாறு பல இடங்களுக்கும் சென்று 'பலரது துன்பங்களையும் போக்குவதில் உங்களுடைய வாழ்க்கையை நடாத்திக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே அன்றாட செலவுகளுக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள். ஏதாவது நிரந்தரமான வருமானம் உங்களுக்கு கிடைக்கின்றதா? எனக்கேட்டார். அதற்கு சுவாமிகள் அப்படியான வருமானம் எதுவும் எனக்கு இல்லை

ஆசையுள்ள இடத்தில் அகச்சாந்தி இல்லை.

என்று கூறினார். அதற்கு பவானி அவர்கள் அப்படி யானால் உங்களுக்கென்று சொத்துக்கள் ஏதும் இருக் கின்றதா? என்று கேட்டார். அதற்கும் சுவாமிகள் இல்லை என்று பதில் கூறினார்கள். எதையுமே வெளிப் படையாகக் கதைக்கும் சுபாவமுள்ள பவானி அவர்கள் அப்படியானால் உங்களின் செலவுகளுக்கு எப்படியோ பணம் கிடைக்கத்தானே வேண்டும் அதற்கு என்ன செய் கிறீர்கள். அதற்குரிய பணம் எப்படி உங்களுக்கு கிடைக் கின்றது என்று மிகவும் அழுத்தமாக சுவாமிகளைக் கேட்டார்கள்.

இவ்வாறு பவானி அவர்கள் கேட்ட கேள்விக்கு சுவாமி களிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை. அதற் குப் பதிலாக சுவாமிகளின் முகத்தில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டன. ஆம்! சுவாமிகளின் முகத்தில் முத்தான வியர்வைகள் தோன்ற ஆரம்பித்தன. அத்து டன் தெய்வீக ஒளியுடன் சுவாமிகளின் முகம் சிவப்பு நிறமாக மாறத்தொடங்கியது. இவ்வாறு பரபரப்பான சூழ்நிலையில் அடித் தொண்டையால் விக்கிய சுவாமி களின் வாய்க்குள் இருந்து கடதாசி போன்ற ஒரு பொருள் சுவாமிகளின் முன்பாக இருந்த மேசை மீது வந்து விழுந்தது. கனவில் நடப்பது போன்ற ஒரு சம்ப வம் இவ்வாறு நிஜமாகவே நடந்து கொண்டிருந்தது. தன்னை சுதாகரித்துக் கொண்ட பவானி அவர்கள் நடுங்கிய கைகளுடன் அந்தக் கடதாசியை எடுத்து விரித் தார்கள் என்ன ஆச்சரியம் அது ஒரு நூறுரூபா நோட்டு.

மிகவும் உற்று, அது உண்மையான பணம் தானா? என பவானி அவர்கள் அதைப் பார்வையிட்டார்கள். எந்த சந்தேகமும் இல்லை. அன் றாட பாவனையிலுள்ள அசல் நூறு ரூபா நோட்டுத்தான் அது. ஒரு பண நோட்டில் இடம் பெற வேண்டிய அத்தனை அம்சங்களும் அதில் இடம் பெற்றிருந்தன. பணம் வெளியிடப்பட்ட திகதியும் பணத்தின் இலக்கமும் அதில் இடம் பெற்றிருந்தன. 18 - 12 - 1971 இல் வெளியிடப்பட்ட அந்தப் பணத்தின் இலக்கம W/20 66365 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு கிடைத்த அந்தப் பண நோட்டினை ஒரு புனிதமான பொருளாக திருமதி பவானி அவர்கள் இன்றும் பாதுகாத்து வருகின்றார். அது மட்டுமல்ல சந்நிதியுடன் இரண்டறக் கலந்த முருகேசு சுவாமிகளின் தெய்வத்தன்மையை உணர்ந்து கொண்ட பவானி அவர்கள் சுவாமிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றி தானும் ஒரு முருகன் அடியவராக மாறி விட்டார். சந்நிதியின் உற்சவ காலங்களிலும் மற்றும் விசேஷ பூசைகள் நடைபெறும் காலங்களிலும் முருகேசு சுவாமிகளுடன் சந்நிதியில் வந்து தங்கி ஆற்றங்கரை முருகனை வணங்குகின்ற வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். அத்துடன் அறுபத்து மூவர் குரு பூசை போன்ற அன்னதானத் தொண்டுகளை மேற்கொள்ளுதல், சந்நிதியில் தங்கியிருக்கின்ற சந்நியாசிகளை உபசரித்தல் போன்ற தொண்டுகளையும் மேற்கொண்டு வருகிறார்.

தற்பொழுது வசித்துக் கொண்டிருக்கும் திருமதி பவானி அவர்கள் முருகேசு சுவாமிகள் இறைவனடி சேர்ந்து ஒரு வருட நிறைவு நினைக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக போக்குவரத்து கஷ்டங்களையும் தாண்டி 1998 ஆம் ஆண்டு பங்குனி மாதம் சந்நிதிக்கு வருகை தந்திருந்தார்கள். மேற்குறிப்பிட்ட அற்புதத்தை ஏற்கனவே அதாவது சுவாமிகள் உயிருடன் இருக்கின்ற பொழுதே எனக்கு பயபக்தியுடன் தெரிவித்திருந்தாலும் சுவாமிகளின் நினைவு தினத்திற்கு சந்நிதிக்கு இறுதியாக வந்திருந்த சமயம் அது பற்றி மிகவும் விளக்கமாக எனக்கு எடுத்துக் கூறினார்கள். அத்துடன் குறிப்பிட்ட பண நோட்டினையும் எனக்கு காண்பித்தார்கள். மேலும் சுவாமிகள் சந்நிதி முருகன் உடைய அருளின் அற்புதத்தை தமக்கு பல சந்தர்ப்பங்களில் அனுபவ ரீதியாக ஏற்படுத்திய சந்தர்ப்பங்களையும் உள்ளம் உருகி எனக்கு எடுத்துக் கூறினார்கள். அது மட்டுமன்றி சந்நிதி முருகனை தமது குல தெய்வமாக தாம் வழிபடுவதற்கு சுவாமிகள் வழி காட்டியதையும் அதனால் தமது குடும்பத்தில் இருந்த மிகப்பெரிய சிக்கல்கள் பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்து தமது குடும்பம் திருப்தியாகவும் நிம்மதியாகவும் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பதையும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்ப எடுத்துக் கூறினார்கள்.

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு.

குறிப்பு:, சந்நிதி முருகப் பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவரவுள்ளது. இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாக குறிப்பிட்டு மலர்க்குழுவிற்கு அனுப்பினால் அவற்றையும் இத்தொடரில் இடம் பெறச் செய்வோம்.

தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.

• ஒரு கருத்துப் பகிர்வு • நாவலர் மகா வித்தியாலய யாழ்ப்பாணம்

# "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே"

மார்கழி மாத ஞானச்சுடரில் அன்பர் திரு. S. R. சரவணபவன் அவர்கள் சிவபுராணத்தில் வரும் "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே" என்ற திருவாசக வரித்தொடருக்கு பல நூல்களிலும் போடப் பட்டுள்ள கருத்துக்கள் தனது மனதிற்குத் திருப்தி தரவில்லை என்று எழுதியுள்ளார். எனது கருத்துக்களை, அவருடனும் வாசகர்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். திரு சரவணபவன் அவர்களுடைய விருப்பமும் அதுவேயாகும்.

'இருள் நடு' என்பதே "நள்ளிருள்" என்றாயிற்று எனலாம். எல்லாம் ஒடுக்கப்பெற்ற காலத்தை "நள்ளிருள்" என்றனர். நள்—நடு; நண்பகல் போலப் பொருள்பட்டு நின்றது.

உயிர்களையெல்லாம் படைத்தற் பொருட்டு "பயின்றாடும்" என்றாயிற்று எனலாம். உயிர்கள் உடலோடும் கருவிகளோடும் இணைந் திருப்பின் அவையும் தொழிலியற்றும். ஆனால் அவை சுயமாக அப்படி தொழில் இயற்றமுடியாதே. இயக்குவிப்பான் ஒருவன் வேண்டுமே! உயிர்களை இயக்குதற்கு அவற்றின் இதயத்துள்ளும், பூவுலகையும் அண்டசராசரங்களையும் இயக்குதற்கு அவற்றின் இதயமாகிய தில்லை யுள்ளும் கூத்தாடுவான். அதுவும் பயின்று ஆடுவான். பயில்தல் என்ப தற்குப் பழகுதல்; தேர்ச்சியடைதல் என்றெல்லாம் பொருள் உண்டு. இறைவனுக்குப் பயிற்சியும் வேண்டுமோ என்ற கேள்வியும் எழலாம். இறைவன் 64 திருவிளையாடல்களைப் புரிந்தவன். 108 நடனங்களை ஆடியவன். கால்மாறியும் ஆடியவன். எனவே அவனுக்குப் பயிற்சியும் தேர்ச்சியும் வேண்டுவதே என்றும் கொள்ளலாம் "அறையில் ஆடி அம்பலத்தில் ஆடவேண்டும்" என்பதால் அறிக. ஆடுதல் அவனுக்குப் பழக்கப்பட்டதொன்றுதானே. அல்லாமலும் பயில்தல் என்பதற்கு நெருங் குதல், ஒலித்தல் என்ற கருத்துக்களும் உண்டு. உயிர்களின் அகத்தும் புறத்தும் இமைப்பொழுதேனும் நீங்காது இயக்குபவன் இறைவன் அவனி செய் கலைஞர்களாக, நந்தி, நாரதர், தும்புரர் ஆகியோர் வாத்தியங்கள் இசைக்க ஆடுபவன் என்றும் பொருள் காணலாம்.

---

★ செருக்கு செல்வத்தைச் சிதறடிக்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் முதலியன ஒழிந்து உயிர்கள் இருளில் ஒடுங்கியிருக்கின்ற அவை மீண்டும் உணவாதற் பொருட்டும், உயிர் உடலோடு பொருந்து ஆசை தீர நுகர்தற் பொருட்டும் நள்ளிரவில் (நடு இருளில்) பயின்றும், அவ் வுயிர் உடல் முதலியவற்றைப் பெற்று நுகர்ந்து வரும் போது, ஆங்காங்கு நேரும் தளர்வகற்றும் பொருட்டு உடம்பின் இதயத்துள்ளும், உலகில் தில்லையுள்ளும் இருந்து கூத்தாடுவான், கூத்தாட்டுவிப்பான் என்று சொல்லலாம். விழிப்பு, கனவு ஆழ்ந்த உறக்கம் ஆகிய எல்லா நிலைகளிலும் இறைவனே காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடுகிறான். ''தூங்கையிலே வாங்குகின்ற மூச்சுக் கழிமாறிப்போனாலும் போச்சு, இதுவும் அவன் செயலன்றோ'', திரு. சரவணபவன் அவர்கள் ''நடு இரவில் மயானத்தில் நடமாடும் இறைவனே'' என்று மேற்கோள் காட்டுகிறார். இங்கே மயானம் என்பது சரியென ஏற்றுக் கொள்ளப்படுமாயின் அது நம்மத்தியிலுள்ள சுடலையையும், இடுகாட்டையும் குறிக்காது. உடல் சிதைந்து, உயிர்கள் ஒடுங்கும் பிரளயகால இருள்மயானத்தையே குறிக்க வேண்டுமென மனங்கொள்ளலாம்.

ஒருவருடைய அனுபவத்தில் விளையும் ஞான இன்பத்தைக் கூற வார்த்தைகளே கிடையா. அவரவர் தத்தம் அனுபவத்திலேயே அதனை உணர்தல் வேண்டும். பொறி புலன்கள் யாவும் கடந்த அனுபவத்தில் விளைந்த மணிவாசகப் பெருமானின் அநுபூதி இன்பத்தை எம்மால் எப்படி உரைக்க முடியும். ''யாம் ஓதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெற'' இறைவன் தந்தது. எனவே அவனருளால் இவற்றைக் கூறினேன்.

''அவ்வாறறிவார் அறிகின்றதலால் எவ்வாறொருவர் தெளிவிப்பதுவே'' என்ற அருணகிரியார் திருவாக்கைச் சிந்தித்துத் திருப்தியடைவோமாகுக

நயினைக் கவிஞர்
நா. க. சண்முகநாதபிள்ளை
(முன்னாள் அதிபர், யாழ் மத்திய கல்லூரி)

---

**யாத்திரை**

யாத்திரை செய்வதென்பது எமது மதத்தில் முக்கியமான ஒரு இடத்தைப் பெற்று வந்துள்ளது. சமயகுரவர்கள்கூட இவ்வாறு யாத்திரைகளை மேற்கொண்டிருந்தனர். எமது மூதாதையர்களும் இவ்வாறான யாத்திரைகளை மேற்கொண்டு தமது வாழ்க்கையைப் பயனுடையதாக்கிக் கொண்டனர். இன்று நாம் அவற்றை மறந்து சொத்துக்களை சேர்க்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம்.

மார்கழி மாத மலர் வெளியீட்டில்
பல்கலைக்கழக போதனாசிரியர்
திரு. ச. விநாயகமூர்த்தி அவர்கள்

---

தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பர் ஒருவரின்

# இதயத்திலிருந்து .........

ஐப்பசி மாத ஞானச்சுடர் வெளியீடு பார்ப்பதற்காக இன்று நான் அங்கு வந்தபொழுது நேரம் 7 மணியிருக்கும். சந்நிதி கோவிலின் ஐப்பசி வெள்ளி காலைப் பூசையையும் பார்த்துவிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு வந்தேன் விழாவும் தொடங்கியது. வெளியீட்டுரையை நிகழ்த்த குறிப்பிட்ட நபர் வராதபடியால் பதில் ஆள் நியமிக்கப்பட்டு வெளியீட்டுரை நிகழ்த்தப்பட்டது. அடுத்து சிவத்தமிழ்ச்செல்வர் சிவமகாலிங்கத்தின் ஆய்வுரை (ஞானச்சுடர்) நிகழ்வு ஆரம்பமாகியது. மடைவெள்ளம் திறந்தாற் போல அவருடைய வாயிலிருந்து ஞானச்சுடர் வார்த்தைகள் வர ஆரம்பித்தன. நான் மெய்மறந்து கேட்டுக்கொண்டேன். வாழ்க்கையில் நொந்து நொந்து போய் வந்த எனக்கு அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் ஞானமுத்துக்கள் என்றே கூறுவேன். இராமாயணம், பாரதம், பகவத்கீதை, கந்தபுராணம், பாரதி பலபல்பட்ட விடயங்களை சுருக்கி மிக அழகாகப் பேசியதை என் வாழ்நாளில் மறக்க முடியாது. இதற்கு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவைச் செயலாளர் அவர்கள் சிவத்தமிழ் செல்வர் சிவமகாலிங்கம் ஆற்றிய ஞானச்சுடர் மலர் வெளியீட்டு ஆய்வுரையின் பின் ஆற்றிய உரை என் மனதைத் தொட்டது. இந்த மலர் விற்பனைக்கு விடுவதில்லை. வியாபார நோக்கத்திற்காகவும் வெளிவருவதில்லையென்றும் இங்கேதான் பெறலாம். அன்பளிப்பு விலை சம் கொடுத்தால் வீடு தேடி வரும் என்று இப்படியான வார்த்தைகளை நான் கேட்டதும் நான் இவ்வுலகில்தான் இருக்கின்றேனா என்று எண்ணினேன். இப்படியான தலைவர் செயலாளர் இருக்கும்போது இந்து மதம் என்றுமே மறையாது.

A. அரசபிள்ளை
கல்வியங்காடு

துணிவுடன் நுணுக்கமும் இருத்தல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ வாசகர் போட்டி முடிவுகள் ★

1 ஆம் இடம் சண்முகம் ஜெயதாசன்
(செந்தாவளவு, இருபாலை கிழக்கு, கோப்பாய்)

2 ஆம் இடம் செல்வி இராமச்சந்திரன் சந்திரிக்கா
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

3 ஆம் இடம் சிவபாதசுந்தரம் பகீரதன்
(134 ஆறுமுகம்வீதி, வட்டுக்கச்சி, கிளிநொச்சி)

## ஆறுதல் பரிசில்கள் பெறுவோர்

ந. சந்திரலீலா
(அருளம்பலம் ஒழுங்கை நல்லூர், யாழ்ப்பாணம்)

த. மயூரா
(பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை)

க. சசிலேகா
(தோப்பு, அச்சுவேலி)

க. நவரூபகாந்
(கெருடாவில் தெற்கு தொண்டைமானாறு)

பே. பேரின்பகுமார்
(20ஏ, பூ. சி. குவாட்டேர்ஸ் மன்னார் வீதி, வவுனியா)

வே. வரதராஜன்
(வீரப்பராயன் கரணவாய் தெற்கு, கரவெட்டி)

திருமதி சு. அருளாம்பா
(34/5, 59 வது ஒழுங்கை மனிங்பிளேஸ், கொழும்பு - 6)

அ. லலிதாலஷ்மி
(பழைய பொலிஸ்நிலைய வீதி, வல்வெட்டி வல்வெட்டித்துறை)

T. சசிகலா
(வடக்குத்தெரு, தொண்டைமானாறு)

ஜெ. பிறேமினி
(முடக்கந் தோட்டம், அளவாய்)

★ தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி வினாக்களுக்குரிய விடைகள்

1) 1988 ஆம் ஆண்டு பங்குனி மாதம் கும்பாபிஷேகத்துடன் பூசைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2) பூவரசம் மரம், சந்நிதி கோவிலின் (மேற்கு வீதியின்) வடமேற்குத் திசையில் உள்ளது.

3) 1992 ல் அல்ஜீரியாவில் நடைபெற்ற தேர்தல் ஒன்றில் இஸ்லாமிய தீவிரவாதிகள் வெற்றியீட்ட இருந்த சந்தர்ப்பத்தில் இராணுவ ஆட்சியாளர் தலையிட்டு அந்தத் தேர்தலை செல்லுபடியற்றதாக் கியதே மனிதப்படுகொலைக்கான காரணமாகும்.

4) முருகன் கனவிலே தோன்றி முருகேசு சுவாமிகளுக்கு கூறியது.

5) உகைப்பு மழை அல்லது மேற்காவுகை மழை.

6) கடவுள் மாமுனிவர் – திருவாதவூரடிகள் புராணம் கூறுகிறது.

7) திருவதிகை வீரட்டானம்.

8) வானவன் மாதேவி ஈஸ்வரம்.

9) புதல்வனாக இருப்பவன் ஒருவன் தந்தையின் கட்டளைகளைச் சிர மேற்கொண்டு ஒழுக வேண்டும். முதற்பிறந்தமையால் ஒருவன் தலை மகன் ஆகிவிட முடியாது. தகைமைகளால்தான் ஒருவன் தலைமகன் ஆதல் முடியும். தந்தை தாயாரின் கருத்துக்களை உவந்தேற்று எவன் ஒருவன் நடக்கிறானோ அவனே தலைமகனென்று வேதங்கள் வரை யறை செய்துள்ளன. வயதில் இளையோனாகினும் ஒழுக்கத்திலும் சீலத்திலும் உயர்ந்தவனே தலைமகன் என்று கருதப்படுகின்றான்.

10) கஜனின் சேவை மனப்பான்மை, தன்னினத்தின் மேன்மைக்காக தன் உயிரை துச்சமென மதித்துப் பகைவர்களிடையேசென்று தன்காரிய சித்தியைப் பெறும் பாங்கு, மனம் குலைந்தாலும் நிலை குலையாத மனத்திடம், தைரியம், புலனடக்கம் போன்றவை.

11) 1. உடலினுள் அதிகமாக எடுக்கப்பட்ட உப்பை நீர்க்கரைசலாகவே உடல் வெளியேற்ற வேண்டுமாதலால்.
2. உடல் இழையங்களின் அதிகளவு நீர் இழக்க தாகம் ஏற்படும்.

12) 1. எதிரிகளிடமிருந்து பாதுகாக்க சூழலுக்கேற்ற இசைவாக்கம் அடைந்தமையே காரணமாகும்.

★ உள்ளமும் உடலும் ஒன்றுபட்டால் உன்னத வாழ்வு. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கடலின் மேலே இருந்து பார்க்கும் பொழுது அடித்தளம் கருமையாக இருப்பதால் சுறாவின் உருவம் இலகுவில் தெரியாது.

3. கீழிருந்து மேலே பார்க்கும் பொழுது வானம் வெண்மையாக இருப்பதால் இலகுவில் தென்படாது.

13) காசிவாசி செந்திநாதையர் அவர்கள்.

14) தேவர்களுக்கு — தம்யத ஒழுக்கம் — புலனடக்கம்.
அசுரர்கட்கு — தயத்துவ ஒழுக்கம் — கருணை.
மனிதர்கட்கு — தத்த ஒழுக்கம் — ஈதல்.

15) யோகி ராம் சுரத்குமார்.

16) கடவுள் சுவாமிகள் (மௌனகுரு முருகப்பிள்ளை சுவாமிகள்)

17) சந்திர பகவான்.

18) ஏரகத்து முருகப்ப செட்டியார் என அழைக்கப்பட்ட முருகப் பெருமான்.

19) மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய "பிரதாப முதலியார் சரித்திரம்"

20) சி. வை. தாமோதரம்பிள்ளை.

குறிப்பு :

1. 21ஆம் 22ஆம் வினாக்களுக்குரிய விடைகள் நேரடியாக இதுவரை வெளிவந்த ஞானச்சுடர்களுக்குள் இடம்பெறாமையால் வாசகர் நன்மைகருதி அந்த வினாக்களை நீக்கியுள்ளோம்.

2. போட்டியை ஒரு சிறந்த போட்டியாக நடாத்தி பல வயதுப் பிரிவினரும் பங்குபற்றச் சந்தர்ப்பம் வழங்கியுள்ளதால் விடைகளைத் திருத்தும் பொழுது வாசகர் பக்கம் நின்றே திருத்தியுள்ளோம்.

3. ஆங்கிலப் பரீட்சை வாசகர் போட்டிக்குள் இடம்பெறவில்லை. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் 1999-03-26 இல் நடைபெறும் மாசி மாத மலர்வெளியீட்டின் பொழுது சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வழங்கப்படும். வெற்றி பெற்றவர்களை நேரடியாக வந்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

★ இன்பமான செயல் இதமாயும் இருக்க வேண்டும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு

கி. பி 14ம் நூற்றாண்டிற்கு முற்பட்டகாலம், ஈழத்து இலக்கிய வரலாற்றில் தேய்ந்து காணப்படுகின்றது. ஏனெனில் இந்நீண்டகால இடைவெளியில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இலக்கிய முயற்சிகளைப்பற்றி அறிந்து கொள்வதற்கு போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. உதிரியாக கிடைக்கப்பெறும் சான்றுகளை மூலதனமாகக் கொண்டு இலக்கிய வளர்ச்சி பற்றி கூறுவது கடினமாகும். தமிழ்நாட்டில் தமிழ் இலக்கியம் தொடர்பான ஏட்டுச்சுவடிகளைப் பேணுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை போல இலங்கையில் எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு சில காரணங்களைக் கூறலாம்.

1. காலத்திற்கு காலம் தென்னிந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள்.

2. தமிழ் நாட்டில் அரசர்கள் புலவர்களை ஆதரித்தது போன்ற நிலை இந்நாட்டில் கி. பி 14ம். நூற்றாண்டு வரை இல்லாதிருந்தமை.

3. சேகரித்து வைக்கப்பட்ட சில சுவடிகள் கூட போர்த்துக்கேயர் காலத்தில் தீ வைத்துக் கொழுத்தப்பட்டமை.

சங்க கால தமிழ்ப் புலவர்களில் ஈழத்து பூதந்தேவனார் என்றொருவர் குறிப்பிடப்படுகின்றார்.

> "திருவளர் மதுரை தென்தமிழ்ச் சங்கப்
> புலவருளொருவராய் புவியினை நாட்டிய
> பூதந்தேவனார் முதலிய சான்றோர்
> தோன்றுவதற் கிடமாந் தொன்றுகொள் சீர்த்தி
> திரை வளை ஈழம்"

என்ற செய்யுளின் மூலம் அவரை இனம் காணமுடிகின்றது. இவர் யாத்த செய்யுட்கள் அகநானூறு ( 88, 231, 307 ) குறுந்தொகை ( 189, 343, 360 ) நற்றிணை (366) முதலிய நூல்களில் காணப்படுகின்றன. இச் செய்யுட்கள் நமக்கு பெருமை தேடித்தரத்தக்கன எனினும் அவர் இலங்கையில் பிறந்து வளர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வரை அவர் பாடல்களை இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சேர்த்துக்கொள்ள முடியுமா?

ஒரு மனிதனுடன் ஒழுங்காகச் செய்யப்படாத செயல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி விழாவில் கடல் சூழ் இலங்கை வேந்தன் கலந்து கொண்டமை, தேவார முதலிகள் ஈழத்துத் தலங்களைப் பாடியமை, சோழப் பேரரசின் ஒரு பகுதியாக சிலகாலம் இலங்கை ஆளப்பட்டமை போன்ற சம்பவங்களைக் கொண்டு இலங்கையில் தமிழ் நாட்டின் இலக்கியத் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். சில கல்வெட்டு ஆதாரங்கள் இலக்கிய முயற்சிகள் நடைபெற்றிருக்கலாம் என அறியத் தருகின்றன.

1. 10-ம் நூற்றாண்டிற்குரிய நான்கு நாட்டார் கல்வெட்டு,

"போதி நிழலமர்ந்த புண்ணியன் போல் எவ்வுயிர்க்கும்
தீதிலருள் சுரக்கும் சிந்தையான் — ஆதி
வருதன்மம் குன்றாத மாதவன் மாக்கோதை
பொரு தர்மபாலனுளன்"

கூறும் வெண்பா செய்யுள் யாப்பில் உள்ள நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

2. பாண்டுவஸ்நுவர, கோட்டகம, பதவியா கல்வெட்டுக்களிலும் தமிழ்ச் செய்யுட்கள் காணப்படுகின்றன.

திரு. வி. நடராசா
(அதிபர், யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

---

## விஞ்ஞான விளக்கம்

விளக்கை அணைப்பதற்கும் ஊதுகின்றோம். அடுப்பை மேலும் எரிப்பதற்கும் ஊதுகின்றோம். ஏன் என்று தெரியுமா?

- விளக்கு, அடுப்பு இரண்டும் எரிவதற்கு ஒட்சிசன் தேவை.
- எரியும் விளக்கை ஊதும்பொழுது வாயிலிருந்து வரும் காற்று எண்ணெய் ஆவியைத் திரியில் இருந்து அகற்றுகின்றது.
- அடுப்பை ஊதும் பொழுது அடுப்பின் மேலுள்ள காபனீரொட்சைட்டும் பழைய வளி, சாம்பலும் அகற்றப்படுகிறது.
- இதனால் காபனீரொட்சைட்டின் இடத்தைப் புதிய வளி எடுக்கின்றது.
- புதிய வளியில் உள்ள ஒட்சிசன் எரிவதற்கு உதவுகின்றது.

உழைப்பில்லா உணவு உப்பில்லா உணவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயம்

## வினாக்கள்

1) முதல் தோன்றிய தலபுராணம் யாது?

2) சாமவேதம் எத்தனை சாகைகளையுடையது?

3) குமார சம்பவத்தின் ஆசிரியர் யார்?

4) உபநிடதங்களுக்கு வழங்கும் வேறு மூன்று பெயர்கள் தருக?

5) புராணங்கள் கூறும் பஞ்சலக்கணங்கள் யாவை?

6) திருமந்திரம் எத்தனை தந்திரங்களாக வகுக்கப்பட்டது?

7) திருமுருகாற்றுப் படையைப் பாடியவர் யார்?

8) ஏம்ப உபநிடதம் எச்சமயத்திற்குரியது?

9) முதலாழ்வார் பெயர்களைத் தருக?

10) திருப்பாவையைப் பாடியவர் யார்?

11) 19ம் நூற்றாண்டில் ஈழத்தில் சைவத்தின் காவலராக விளங்கியவர் யார்?

12) புருடார்த்தங்கள் யாவை?

13) சைவ ஆகமங்களுள் உருத்திராகமங்கள் எத்தனை?

14) பிருகேத்திரம் என்றால் என்ன?

15) உபவேதங்களைக் கூறுக?

16) வேதாந்த சூத்திரம் யாது?

17) கந்த புராணம் எத்தலத்து முருகன் பேரில் பாடப்பட்டது?

18) ஈழத்தில் பக்தி வழிபாட்டு முறை முருகன் தலங்கள் யாவை?

19) ஆச்சிரமங்கள் யாவை?

(விடைகள் அடுத்த மாசி மலரில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PART 13

1. Complete the Sentences Using

two, too, or to

(a) I would like a cup of tea. Mohan would like a cup ................

(b) I had ................ cups of tea Yesterday.

(c) I can't dring the tea. It's ................ hot.

(d) I talked to Ranjith, Ram wanted ................ talk ................ Ranjith ................

(e) I walked ................ School today. Mala walked ................ School today ................

(f) I am going ................ take the bus ................ School tomorrow.

(g) Shh... I want ................ listen ................ the news broadcast.

(h) I can't study. The music is ................ loud.

(i) The weather is ................ cold for us ................ go ................ beach.

(j) I have ................ apples. Suseela wants ................ have ................ apples ................

Too — உம் என்பதைக் குறிக்கும்.
To — க்கு என்பதைக் குறிக்கும்.

★ பேச்சின் அழகு உண்மையால் விளங்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியால
யாழ்ப்பாணம்

2. Fill in the blanks using the following words. use the plural form if necesary.

**Centimeter, dishes, fish, glass, horse, leaf, woman, thief, tray, work, wife, advice.**

(a) ……………… fall from the trees in Autumn.

(b) Sometimes I help my mother in cleaning the ………………

(c) Cow boys ride ………………

(d) Married woman are called ………………

(e) ……………… Steal things, money, cars, etc.

(f) People carry their food on ……………… at a cafeteria.

(g) I am not very busy today. I dont have much ……………… to do.

(h) I have some problem. I need your help. I need some ……………… from you.

(i) some ……………… have mustaches.

(j) Mohan has five ……………… in his aquarium.

(k) In some countries people use ……………… for their tea.

(l) How many ……………… in a meter?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. Translate to Tamil

Every man wants to have his own way. He wants to think and act as he likes. Everyone, however, cannot have his own way because he lives in a society he belongs to. Society means a group of people with the same laws and the same way of life. People in society may make their decisions. But they ought not to endanger the lives of others by wrong, unjust, and harmful decisions.

## 4. Old Sayings

(a) Educated men without religion are clever devils.

மதப்பற்றற்ற கல்விமான் புத்திசாலியான அரக்கர்களுக்கு சமனானவர்.

(b) Experience gives a wisdom that is costly

அனுபவம் கொடுக்கும் அறிவு விலை மிக்கது.

(c) Atheism is rather in the lip than in the heart.

நாத்திக வாதம் மனிதனின் உள்ளத்தைக் காட்டிலும் அவனது நாக்கிலே தான் அதிகம் உள்ளது.

S. Thurairajah
(English Tutor)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

**05-02-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை: சி. சிவலோகம் ஆசிரியர்
(பிரதம ஆலோசகர் பேரவை)

**வில்லிசை : " முருகன் புகழ் "**

வழங்குபவர்கள் : செல்வன் த. நந்தகேசன் தலைமையில்
வல்வெட்டி விநாயகர் வில்லிசைக் குழுவினர்

---

**12-02-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை: பிரம்மஸ்ரீ. ப. மனோகராக்குருக்கள்
(வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்)

**சொற்பொழிவு: " வேலுலாந் தடக்கை வேந்தன் "**

வழங்குபவர்: பிரம்மஸ்ரீ பாலசர்வேஸ்வரகுருக்கள் B A (Hon)
(காயத்திரி பீடம் இணுவில்)
வடமராட்சி இந்து குருமார் ஒன்றிய ஆதரவில்

---

**19-02-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை: இசைமணி சி. துரைராஜா

**விடயம் : " இன்னிசை "**

வழங்குபவர்கள்: சி. பத்மலிங்கம் பாட்டு

K. குகபரன் — வயலின்
P. வரதன் — தபேலா
M. சிதம்பரநாதன் — மிருதங்கம்
K. ரமணன் — முகர்சிங்

---

**26-02-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் - மாத வெளியீடு
# மாசி - 1999

வெளியீட்டுரை : கி. நடராசா (M. A. அதிபர் அ. மி. கல்லூரி)

மதிப்புரை : S. சிவலிங்கராசா
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ்/பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 1999 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2000 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org